Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 27 ஞாயிற்றுக்கிழமை (12-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:283

# நிபந்தனைகள் விதிக்காமலேயே இரண்டு தரப்பும் பேச வேண்டும்

## யுத்த நிறுத்தத்துக்குத் தயாரில்லை என்கிறார் பிரதமர் ரத்னசிறி

கொழும்பு,நவம்பர்12

**அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதானால் - சுமுகமாக நடத்த வேண்டுமானால் - இரண்டு தரப்புகளுமே நிபந்தனைகளை விதிக்கக் கூடாது. நிபந்தனையற்ற பேச்சுக்களே வெற்றி தரும் என்பது எனது அபிப்பிராயம்.**



**இவ்வாறு பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா கொழும்பிலிருந்து வெளிவரும் "வீக்எண்ட் எக்ஸ்பிரஸ்" ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

**அதேவேளை, விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்குத் தயாரில்லை என்று ஹொரணையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.**

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசுவதானால் என்னென்ன நிபந்தனைகளை விதிக்கும் என்று கேட்டதற்கு அது குறித்து எழுந்தமானத்தில் கூறமுடியாது என்று பதிலளித்த பிரதமர்-

நிபந்தனைகள் எதுவும் இல்லாமலே பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்பதே எனது சொந்தக் கருத்து. நாங்களும் நிபந்தனை விதிக்கக் கூடாது; விடுதலைப் புலிக

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதுடில்லி நடுவர் மன்றத்தில்

## தடையை நீக்கக் கோரி விடுதலைப் புலிகள் மனு!

புதுடில்லி,நவ.12

விடுதலைப் புலிகள் மீது இந்தியாவில் நீடித்துவரும் தடையை நீக்கக் கோரி புதுடில்லி நடுவர் மன்றத்தில் புலிகளின் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புலிகளின் தலைமை அலுவலகம் சார்பாக சட்டத்தரணிகள் என்.சந்திரசேகரன்,கோபிகிருஷ்ணா ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1992 ஆம் ஆண்டு இந்திய மத்திய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்தது. எனினும் இதுவரை இந்தத் தடை பற்றி புலிகள் இயக்கத்திற்கு சட்டப்படி அறிவிக்கப்படவில்லை.

இதனால் புலிகள் நடுவர் மன்றத்தில் மேன்முறையீடு செய்யவில்லை. நடுவர்மன்றம் வழங்கிய ஒருதலைப் பட்சமான அறிக்கையை வைத்து மத்திய அரசு புலிகள் மீதான தடையை இரண்டாண்டுகளுக்கு ஒரு தடவை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இம்மாத நிவாரணத்தை உடன் வழங்கப் பணிப்பு

### அமைச்சர் டக்ளஸ் அவசர நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.12

வழங்கப்படாது உள்ள நவம்பர் மாதத்துக்குரிய உலர் உணவு நிவாரணத்தை உடனடியாக வழங்குமாறு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழர் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதனைப் பணித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இந்த உத்தரவு வழங்கப்பட்டதாக ஈ.பி.டி.பியின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச களஞ்சியப் பொறுப்பாளர் குருநகர் களஞ்சியத்திருட்டுத் தொடர்பாக நீதிமன்ற விசாரணையில் இருப்பதனால் இந்த மாத நிவாரணம் இது

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தி காலத்தை வீணடிக்க வேண்டாம்!

### மூன்று தமிழ்க் கட்சிகள் அரசுக்கு ஆலோசனை

கொழும்பு,நவ.12

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அரசாங்கமும், ஐ.தே.கட்சியும் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்திக் காலத்தை வீணடிக்காது யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ரெலோ ஆகிய கட்சிகளின் தலைவர்கள் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாயின் அரசாங்கம் முதலில் தமிழ்க் கட்சிகளுடன் பேசி இணக்கத்துக்கு வரவேண்டும் என ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே இவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும், எம்.பியுமான வீ.ஆனந்தசங்கரி கருத்துத் தெரிவிக்கையில்:- ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானப் பேச்சுக் குறித்த முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. ஆனால் முதலில் நாங்கள் பேசுவதானால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வரப்போவதில்லை - என்றார்.

தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில்:- தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துவது என்பது, இனப்பிரச்சினைத் தீர்வில் காலத்தைக் கடத்தும் முயற்சி எனக் குறிப்பிட்டார்.

ரெலோ அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில்:- எம்முடன் பேசுவதைவிட நிபந்தனை எதுவும் இன்றி யுத்தத்தை உடனடியாக நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது சிறந்தது - என்றார். (இ-7)

## மட்டக்களப்பில் நாளை துக்க தினம்

மட்டக்களப்பு,நவ.12

படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து நாளை திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

'மக்கள் அமைப்பு' என்னும் அமைப்பு இதற்கான அழைப்பை விடுத்துள்ளது.

வியாபார நிலையங்களை மூடுமாறும் பாடசாலைகள், அரச அலுவலகங்களை செயலிழக்கச் செய்யுமாறும் 'மக்கள் அமைப்பு' வேண்டுகோள் விடுத்துள்ளது.

(இ-7-21)

### புலிகள் தரப்பில் உயிரிழந்த 8 பேர் விவரம்

வவுனியா,நவ.12

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதம் 17ஆம், 21ஆம் திகதிகளில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த 8 உறுப்பினர்களின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் முயற்சிகளுக்கு காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கம் ஆதரவு

கொழும்பு,நவ.12

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு நோர்வே நாடு மேற்கொண்டு வரும் முயற்சிகளை காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கத் தலைவர் நாணயக்கார வரவேற்றுள்ளார்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு சகல தரப்பினரும் தமது ஆதரவினைத் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தடுப்புக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு - யாழ். சேவைக்காக

## 3 அன்ரனோவ் விமானங்கள் இந்த வாரம் கொள்வனவு

கொழும்பு,நவ.12

கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பயணிகள் விமானச் சேவையை நடத்துவதற்கென மூன்று அன்ரனோவ் விமானங்கள் இவ்வாரம் கொள்வனவு செய்யப்படவுள்ளன என விமானப்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

உக்ரைன் நாட்டில் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ள இந்த விமானங்கள் குடாநாட்டுப் பயணி

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பிரதேச சிறைகளுக்கு எங்களை இடம்மாற்றுங்கள்!

### களுத்துறைக் கைதிகள் கோரிக்கை

கொழும்பு,நவ.12

தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் பண்டாரவளைத் தடுப்பு முகாமில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்வதைத் தவிர்க்க தம்மை தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள சிறைகளுக்கு இடம் மாற்றுமாறும் களுத்துறைச் சிறையில் உள்ள தமிழ்க் கைதிகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்ப் பிரதேசங்களுக்கு தம்மை இடம்மாற்றாவிட்டால் கொழும்பு நகரில் உள்ள மையப் பகுதியில் சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களின் கண்காணிப்பில் தாம் விடப்படவேண்டும் என்றும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்க் கைதிகளுடன் சேர்த்து சிங்களக் கைதிகளையும் வைத்திருப்பது பெரும் விபரீதத்தைக் கொடுக

(12ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(11-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ.621,702.**

# நெடுந்தீவுக் கடற்கரையோரம் சட்டவிரோத மணல் அகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 12

நெடுந்தீவின் கடற்கரையோரப் பகுதிகளில் சட்டவிரோதமாக மண் அகழ்வது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

வெல்லை, பெரியதுறை மற்றும் மணல்கரை, மாவலித்துறை ஆகிய பகுதிகளில் இவ்வாறு சட்டவிரோதமாக மண் அள்ளுவது அதிகரித்துள்ளது.

கட்டுப்பாடின்றி மண் அள்ளப்படுவதனால் கடல் நீர் தீவின் உட்பகுதிகளில் நுழையக் கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிராம சேவையாளர்கள் மற்றும் பிரதேச சபையினர் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வீட்டில் திருடிய மோ. சைக்கிள் மயானப் பகுதியில் இருந்து மீட்பு

கல்வியங்காடு கட்டப்பிராய்ப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கடந்த 4 ஆம் திகதி களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் கோண்டாவில் பகுதியிலுள்ள மயானம் ஒன்றில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கட்டப்பிராயில் உள்ள சின்னத்துரை என்பவரது வீட்டில் இருந்து இந்த மோட்டார் சைக்கிள் உட்பட மேலும் பல பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருந்தன.

பொலீஸாரின் உதவியுடன் மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது. இத்திருட்டு தொடர்பாக எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை. (ஐ-180)

# பாடசாலைகள், ஆலயங்களைத் திருத்துவதற்கு நிதி ஒதுக்கீடு

வலி. கிழக்கு, நவ. 12

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பாடசாலைகள், வணக்க ஸ்தலங்கள் புனரமைப்புக்கென இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 11 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் கிழக்கு சென். ஜோன்ஸ் தேவாலயம், நல்லூர் சிவன் கோயில், கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம், யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயம், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், நல்லூர் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஆகியனவே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இப் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதேச செயலக திட்டமிடற் பணிப்பாளர் தெரிவித்தார் (ஐ-180)

# விவசாய பீடத்தில் இந்த ஆண்டு 'ராகிங்' கெடுபிடிகள் இல்லை

## பீடாதிபதி கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தில் இந்த வருடம் "ராகிங்" கெடுபிடிகள் முற்றாக நிறுத்தப்பட்டமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

இவ்வாறு விவசாயபீட பீடாதிபதி எஸ். ராஜதுரை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:—

புகுமுக மாணவர்கள் கடந்த காலங்களில் ஏனைய மாணவர்களால் ராகிங் கெடுபிடிகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர். ஆனால் இவ்வருடம் அவ்வாறு நடக்கவில்லை.

புகுமுக மாணவர்களை ஏனைய மாணவர்கள் இன்முகத்துடன் வரவேற்று தம்முடன் ஒன்றிணைத்துள்ளனர். இந்த வரவேற்பு வைபவம் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது.

குடாநாட்டு மக்களால் வெறுக்கப்பட்ட ராகிங் கெடுபிடிகள் தொடர்பாக விவசாய பீடத்தில் இது வரை எதுவிதமான முறைப்பாடுகளும் எனக்குக் கிடைக்கவில்லை.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியான பீடமாக விவசாய பீடம் திகழ்வதையிட்டு நான் பெருமைப்படுகிறேன்.

இனிவரும் காலங்களிலும் இந்த மாணவர்கள் முன்மாதிரியாக நடந்து கொள்வார்கள் என நான் முழுமையாக நம்பியிருக்கிறேன் — என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

# சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தின் முதல் சஞ்சிகையான 'தேறல்' வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-10)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் சரவணமுத்து

யாழ்ப்பாணம், 213, நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணியின் அன்புக் கணவர் வைத்திலிங்கம் சரவணமுத்து 11-11-2000 நேற்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11—11—2000 (நேற்று) சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி அனுஷா சிவனேஸ்வரன் (மகள்)
யாழ். பல்கலைக்கழகம்.

81, சினியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம். (80461)

# இன்று நடப்பவை

கொழும்புத்துறை, நவ. 12

உலகளாவிய அகண்ட நாம பஜனை நிகழ்ச்சிகள் கன்னாகம் பயிலணி ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிமுதல் மாலை 5.30 மணி வரை நடைபெறவுள்ளன.

சாயி பஜனை, கூட்டுப் பிரார்த்தனை, காயத்திரி மந்திர வழிபாடு, தியானம் ஆகியன இடம்பெறும்.

சகல சாயி நிலையங்களிலும் உலக அமைதி, சமாதானம் நிலவ இறை ஆசிவேண்டி உலக அகண்ட பஜனையை நடத்துமாறு பகவான் சத்ய சாயி பாபா வேண்டியுள்ளார். அதை ஒட்டியே இந்த நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 12

யாழ். பாலர் கல்விக்கழகம் 15 பாலர் பாடசாலைகளுக்கிடையேயான 35 ஆவது வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கழகத் தலைவர் சிவநேயர் இ. தவகோபால் தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த சார்லிஸ் ஸ்ரிக்லான்ட்டும் யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமியும் கலந்து கொள்வர். (ஐ-30)

# மாதாந்த உதவிப்பணம்

கொழும்புத்துறை, நவ. 12

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும் காச நோய், தொழுநோய், புற்று நோய் என்பவற்றிற்கான உதவிப் பணத்தைப் பெறுபவர்களினதும் நவம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் யாழ். பிரதேச செயலகத்தினால் தபால் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச செயலாளர் பா. செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார்.

இப் பணத்தைப் பெறுபவர்கள் தத்தமது பகுதித் தபாலகங்களுக்கு நாளை திங்கட்கிழமை நேரில் சென்று பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் கே. வி. சிவனேசன் தெரிவித்துள்ளார். (ஐ-30)

நாகலிங்ஸ்
சுன்னாகம்.
அஜித் (இரு வேடம்)
சிம்ரன், விவேக்
நடித்த
வாலி
(ரீல்ஸ்)
காட்சிகள்:
11.00, 2.30 (பு.நே.)
(80438)

ராஜா
யாழ்ப்பாணம்
பிரசாந், ரம்பா,
மணிவண்ணன்,
ராதிகா
மற்றும் பலர் நடிப்பில்
பூமகள் ஊர்வலம்
காட்சிகள்
10.30, 2.00 (பு.நே)
15-11-2000 முதல்
ஈரமான ரோஜாவே
(சி/13648)

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி

குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் திணைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள C/A 2358 ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர் விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

10 - 11 - 2000 (வெள்ளிக்கிழமை) வரை கிடைத்த நிதி.

| | | ரூபா |
|---|---|---|
| | முன் கொண்டு வரப்பட்டது: | 520,833 |
| 1. | ச. கதிர்காமத்தம்பி - அல்வாய் வடமேற்கு, அல்வாய் | 150 |
| 2. | யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் - யாழ்ப்பாணம். | 5,001 |
| 3 | அ. கனகேந்திரம் - கண்டிக்குளி. | 500 |
| 4. | ஸ்ரீராமராஜ் அன் சன்ஸ் - யாழ்ப்பாணம். | 500 |
| 5. | சசிரேகா - கல்வியங்காடு | 500 |
| 6. | லயன் செல்லப்பா நடராசா, மூத்தபத்திரிகையாளன் | 1,001 |
| 7. | ப. நோ. கூ. சங்கம - புலோலி. | 2,000 |
| 8. | வே. இராசா - அன்பகம், உடுப்பிட்டி. | 1,000 |
| 9. | வளரும் பத்திரிகையாளர் (T M N T.) - மீசாலை மேற்கு. | 111 |
| 10. | ஐ. மகாலிங்கம் - கோண்டாவில் கிழக்கு. | 1,000 |
| 11. | ஓர் அன்பர் - 82, புங்கங்குள வீதி, யாழ்ப்பாணம். | 1,000 |
| 12. | பணிப்பாளர்களும் பணியாளர்களும் - யாழ். ப. நோ. கூ. சங் யாழ்ப்பாணம் | 10,000 |
| 13. | யாழ். ப. நோக்குக் கூட்டுறவுச்சங்கம் | 5,000 |
| 14. | யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் | 5,000 |
| 15 | யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி — யாழ்ப்பாணம். | 3,420 |
| 16. | T. சிவசுப்பிரமணியம் — தொல்புரம், சுழிபுரம். | 505 |
| 17. | மருத்துவபீட மாணவர்கள் — லாவுலு விடுதி, யாழ்ப்பாணம் | 750 |
| 18. | ஓர் அன்பரின் அன்பு மகளாரின் நினைவில் — பண்டத்தரிப்பு | 300 |
| 19. | ஓர் அன்புத் தாய் — மட்டுவில் வடக்கு. சாவகச்சேரி. | 200 |
| 20. | த. பிரியதர்சினி — புலோலி வடமேற்கு. | 100 |
| 21. | துளசிகா இராஜேந்திரன் — புலவனார் வீதி, கல்வியங்காடு. | 200 |
| 22. | யாழ். பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் — யாழ்ப்பாணம் | 7,651 |
| 23. | திருமதி ஈ. கமலாசினி — கமலா இல்லம் புலோலி தெற்கு, புலோலி. | 200 |
| 24. | யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி — யாழ்ப்பாணம் | 3,280 |
| 25. | முகாமைத்துவ, வணிக கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த உதவி விரிவுரையாளர்கள் — யாழ். பல்கலைக்கழகம். | 3,150 |
| 26. | S பாலசுந்தரம் வில்வந்தெரு லேன், புங்கங்குளம், அரியாலை. | 500 |
| 27. | யா / புங்குடுதீவு மகா வித்தியாலயம் — புங்குடுதீவு. | 2,750 |
| 28 | இ. சிவகாமி — பிரம்படி கொக்குவில். | 200 |
| 29. | அனுதாபிகள் — யாழ்ப்பாணம். | 3,700 |
| 30. | மேரி மாகிறேற் தியாகராஜா — கச்சேரியடி, கண்டி வீதி. | 250 |
| 31. | ஓர் அன்பர் — வட்டு.கிழக்கு சித்தன்கேணி. | 1,000 |
| 32. | பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் மூலம் பல்கலைக்கழக போதனா சாரா ஊழியர்கள் (266 பேர்) — யாழ். பல்கலைக்கழகம் | 30,000 |
| | மொத்தம் | 611,752 |

# உதயன்

## லண்டனில் 'இராமாயணம்'!

இராவணனின் சகோதரி சூர்ப்பனகையின் மூக்கை, இராமனின் தம்பி இலக்குமணன் வெட்டியதாகஇராமாயணத்தில் ஒரு சம்பவம்; காட்சி; கவிதை. அதனை பாடசாலையில்பயின்ற காலை, திணுக்குற்றது உண்டு.

அண்மையில் லண்டன் நகரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் கோஷ்டிகள் இரண்டுக்கு இடையில் நடைபெற்ற சண்டையில் ஒருவரின் மூக்கு வெட்டப்பட்டது என்ற செய்தி மேலே கூறிய இராமாயணக் காட்சியை நினைவுபடுத்தியது. இராமாயணத்தில் மூக்கை இழந்தவர் பெண்; லண்டனில் இழந்தவர் ஆண்.

லண்டன் ''டெய்லி மிரர்'' பத்திரிகையின் செய்தி மூலம் சம்பந்தப்பட்ட தமிழ் இளைஞரின் மூக்கு வாளால் வெட்டப்பட்டதாக —அரியப்பட்டதாக — அறியப்படுகிறது.

கனடாவில், ரொறென்ரோ மாநிலத்தில் ஸ்காபரோ என்ற பகுதியில் யாழ்ப்பாணத் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். அங்கும் கடந்த வாரம் யாழ். இளைஞர் கோஷ்டிகள் மோதிக்கொண்டன. இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

இந்தச் செய்திகளைப் படித்ததும் யாழ்ப்பாணத் தமிழ் இளைஞர்கள் இங்கிருந்து வெளி நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து போனது, எங்களது இன்றைய பண்பாட்டுப் பெருமை சண்டையும் மற்றும் கொலைக் கலாசாரமுமே என்று வெளி உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவா என்ற வேதனை ஏற்படுகிறது.

இங்கு எங்கள் நாட்டில் இளைஞர்கள் வெவ்வேறு இயக்கங்களாகப் பிரிந்து நின்று மோதுண்டு தங்களுக்குள் சண்டையிட்டுக் கொலையுண்டு போனதன் பிரதிபிம்பமாக அங்கும் இளைஞர் சண்டைகள் நடைபெறுகின்றனவா என்ற சந்தேகமும் உண்டாகிறது.

ஆனால், அவ்வாறில்லை என்று கனடாவில் அடிக்கடி நடைபெற்று வரும் இளைஞர் மோதல்களை ஆராய்ந்த சுதா பாலசிங்கம் என்ற ஆய்வாளர் தமது அறிக்கையில் கூறுகிறார்.

தாம் செய்த ஆய்வுகள், நேர்காணல்களிலிருந்து இப்போது கட்டிளமைப் பருவத்தில் உள்ள தமிழ் இளைஞர்கள் மூன்று நான்கு வயதிலேயே பெற்றோருடன் புலம்பெயர்ந்து வந்தவர்கள்; ஆகையால் குடாநாட்டிலிருந்து— தாய்நாட்டிலிருந்து — வன்செயல் மற்றும் மோதல் கலாசாரம் இங்கு வந்ததாகக் கூறமுடியாது; ஏனைய கலாசாரங்களிலும் கோஷ்டிமோதல் உண்டு என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் — என்கிறார் சுதா பாலசிங்கம்.

அதன் அர்த்தம் என்ன? இங்கிருந்து புலம்பெயர்ந்து செல்லும் பெற்றோரின் பிள்ளைகள் அந்தந்த நாட்டுப் பழக்க வழக்கங்களாலும், கலாசாரங்களாலும் ''ஆட்கொள்ளப்படுகிறார்கள்'' என்பதே.

சிறுவர்கள், இளைஞர்கள் நல்வழி நடப்பதற்கும் முன்னேறுவதற்கும் உறுதுணையாக இருக்க வேண்டிய பொறுப்பு புலம்பெயர்ந்த பெற்றோர்களுக்கே நூறு வீதம் உண்டு என்பதன்னை அங்கு மோசமடைந்துவரும் நிலை உணர்த்துகிறது

எங்கள் நாடுகளில் இந்தப் பொறுப்பில் வீட்டுக்கு ஐம்பதும் நாட்டுக்கு ஐம்பதும் என்று கொள்ளலாம். ஆயினும் இளைஞர்களை நல்லவர்களாக, வல்லவர்களாக, பண்புள்ளவர்களாக உருவாக்கும் 'பணியில் இரண்டு' தரப்புகளுமே தமக்குரிய பங்கை இப்போது செய்யவில்லை அந்த நிலையை மாற்றாவிட்டால் நமது அடுத்த சந்ததி இளைஞர் சமுதாயமும் கெட்டுப்போய்விடும்.

# இறைவனின் ஆசீர்வாதங்கள் பெற்று எமது வாழ்வை அர்ப்பணிப்போம்

''நீங்கள் யாவரும் புறப்பட்டுப்போய் இறைவனுக்காய் வாழும் மனிதர்களாய் அனைவரையும் ஆக்குங்கள்'' என்பதே இறைவன் எங்களைப் பார்த்து விடுக்கும் அறை கூவலாகும். மனிதன் மனிதனாக வாழாத போது அவன் பாவியாகிறான். இன்றைய உலகில் பாவத்துக்குள் மூழ்கித் தவிக்கிற எத்தனை பேரை நாம் காண்கிறோம். அவ்வாறு கண்டும் வாளாதிருப்போர் நம்முள் எத்தனை பேர்?

மனிதர்களை எமக்காகச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் எனவும், நம்மைப் பலப்படுத்திக் கொள்ள உம் மருகில் அநேகரை வைத்துக் கொள்ள வேண்டும் எனவும் செயற்படுவோர் நம்முள் எத்தனை பேர்?

நமது கடந்த கால வரலாறுகளில் தம்மைக் கடவுளாக ஏனையோர் வழிபட வேண்டும் என முன் நிறுத்தி சாதாரண மக்களின் வழிபாடுகளையும், சேவைகளையும் பெற்றுக் கொண்டவர்களும், மனிதர்களுக்காய் ஊழியம் செய்யும் படி மனிதர்களை ஏவி விட்ட பலரையும் நாம் வரலாறு மூலமாக அறிந்திருக்கின்றோம்.

ஆனால் அவ்வாறானவர்களெல்லாம் பின்னர் அநாதரவாய் விட்டு விடப்பட்டு இறந்தனர். ஒருவன் தனது வாழ்வில் இறைவனது இரக்கத்தையும், கிருபையையும் பெற்றுக்கொள்ளா விட்டால், அவன் தன் வாழ்வில் வேறு எதனையும் பெற்றுக்கொள்வதில் பிரயோசனமில்லை. வேறு எதனையும் அவன் தனது வாழ்வில் சம்பாதித்து வைத்துக் கொண்டாலும். இறை இரக்கத்தையும் கிருபையையும் சம்பாதித்து வைத்துக் கொள்ளாவிட்டால் அதில் எந்த விதமான பிரயோசனமுமில்லை.

இறைவன் சாதாரண மனிதனைப் போன்று தமது சுயநலனுக்காக அநேகரைத் தமதண்டையில் சம்பாதித்து வைத்துக்கொண்டு, தமக்கு எதிரானவர்களைக் கீழே

**ஞாயிறு நற்பிரசாதம்**

தள்ளி விழுத்தி விடுபவரல்லர். தனது பாசக்கூட்டுக்குள் அனைவரும் வந்து தஞ்சமடைந்து, மற்றவர்களுக்குத் தீங்கிழைக்காத, பாவமற்ற வாழ்வினை அனைவரும் வாழ வேண்டும். என்பதை இறைவன் எதிர்பார்க்கிறார். வேதப் புத்தகம் சொல்கிற படி இறைவன் மனிதனைப் போன்று முகத்தைப்பார்த்துத் தீர்ப்பிடுகிறவரல்லர். அவர் உள்ளத்தை ஆராய்ந்து பார்த்துத் தீர்ப்பிடுகிறார்.

''எனது வீடுநிரம்ப வேண்டும்'' என்று லூக்கா நற்செய்தி நூலின் 14 ஆம் அதிகாரத்தில் தனது விருப்பத்தை ஓர் உவமையினூடாக இறை குமாரன் இயேசு கூறுகிறார். எனவே தனது இல்லத்தில் சேரும் மக்களை இறைவன் வரையறுப்பதில்லை, எவர் தன்னிடம் தஞ்சமடைந்தாலும் அவர் எவ்வித வேறுபாடுமின்றி ஏற்றுக் கொள்கிறார். ஆகவே இறைவனது விருப்பம் என்னவெனில், தனது வீடு நிரம்ப வேண்டும் என்பதற்காக, நாம் அனைவரும் புறப்பட்டுப் போய் இறைமக்களாக அநேகரை ஆக்க வேண்டும் என்பதே.

நம்முன் எத்தனை பேர் இவ்வாறு செயற்படுகிறோம்? நாம் எவரின் கீழ் வேலை செய்கிறோமோ அல்லது எந்த மனிதரின் தயவு எமக்குத் தேவையாக இருக்கிறதோ அதற்காக, அவருக்காக மனிதர்களைச் சம்பாதித்துக் கொண்டு, நல்ல பெயர்களை வாங்கிக் கொண்டு நாம் உயர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்து இறைபாதையை விட்டுத் தடம்புரள்பவர்கள் நம்முன் எத்தனை பேர்?

இறைவனுக்காக நாம் வாழும் போது இறைமக்களாகப் பலரை மாற்றும் போது இறைவன் எங்களை உயர்த்துவார் என்றோ அல்லது இறைவன் மட்டுமேஎம்மை உயர்த்த முடியும் என்றோ நம்புபவர்

அருள்திரு
**பி. தேவதாஸ்**

கள் நம்முன் எத்தனை பேர்? போலிகளைக்கண்டு ஏமாந்து நாம் பல வேளைகளில் இந்த உண்மையை மறந்து விடுகிறோமல்லவா?

எனவே இனியாவது சிந்தித்து செயற்படுவதனூடாக இறைவன் தரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டு அவருக்காக எமது வாழ்வை அர்ப்பணிப்போமா? உண்மையாகவே— சிந்திப்போம்! செயற்படுவோம்!!

# உருளைக்கிழங்கு விளைச்சலை அதிகரிப்பதற்கான வழிமுறைகள்

யாழ். மாவட்டத்தில் உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கையில் விளைச்சலை அதிகரிக்கக் கடைப் பிடிக்க வேண்டிய முக்கிய தொழில் நுட்பங்கள் பற்றி உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை விடுத்த செய்திக் குறிப்பு இது.

இந்த ஆண்டு பெரும்போக உருளைக்கிழங்குச் செய்கைக்காக நெதர்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'டிசிறி' இன விதைகிழங்கு தனியார் மூலம் கொண்டு வரப்பட்டு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துச் சிரின்மையால் இங்கு உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கைக் கடந்த சில ஆண்டுகளில் இருந்த நிலைமைபோன்று பிறமாவட்டங்களுக்குக் கொண்டு சென்று சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்படலாம். எனவே உற்பத்தியை இம் மாவட்டத் தேவைக்கு மாத்திரமே பாவிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். யாழ். மாவட்ட விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்கள் பெற்ற அனுபவத்துடன் விவசாயத் திணைக்களம் வழங்கும் தொழில்நுட்ப அறிவையும் பயன்படுத்திக் கூடிய விளைவைப் பெறவேண்டும் என்பதே எமது நோக்கமகும்.

### தொழில்நுட்பங்கள்

1. உருளைக்கிழங்கு வெற்றிகரமாகச் செய்கைபண்ணுவதற்கு நிலம் குளிர்ச்சியாக இருத்தல் வேண்டும். அத்தோடு கிழங்கு பருமனடையும் போது இரவுகாலம் குளிராகவும் பகல் வெப்பமாகவும் இருத்தல் அவசியமானதாகும். இப்படியான சுவாத்தியம் யாழ். மாவட்டத்தில் வழமையாக கார்த்திகை மாத நடுப்பகுதியிலிருந்து பங்குனி வரையும் நிலவுவதால், நடுகையை கார்த்திகை மாதம் நடுப்பகுதி முதல் மார்கழி மாத இறுதிவரை மேற்கொள்ளலாம். இக்கால இடையில் நடுகையைப் பரவலாக மேற்கொள்ளுவதன் மூலமும், பயிரை நன்கு முதிர்ச்சியடைய விட்டு (கிழங்கு நட்டு 3 மாதத்திற்குப்பின்) அறுவடை செய்து அறுவடையின் ஒரு பகுதியை உரியமுறையில் — 3 மாதங்கள் வரை சேமித்துவைத்து விற்பனை செய்வதன் மூலமும் சித்திரை, வைகாசி மாதம்வரை இம் மாவட்டத் தேவையைப் பூர்த்தி செய்யலாம். இந்த முறைகளைப் பின்பற்றும்போது சந்தை விலை கூடுதலாக வீழ்ச்சியடையமாட்டாது. இதனால் உற்பத்தியாளர்கள் கூடிய நிகர இலாபத்தைப் பெற முடியும்.

2. இப்பொழுது வழங்கப்படுகின்ற விதை கிழங்குகளில் முளை அரும்பவில்லை. எனவே முளை அரும்பச் செய்ய நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். முளை அரும்பாத கிழங்குகளைக் காற்றோட்டமுள்ள வெயில் பிடிக்காத ஓரளவு வெளிச்சம் பிடிக்கக் கூடிய அறையுல் மணலைப் பரப்பி அதற்கு மேல் ஒரு படை கிழங்கைப் பரவி விடவும். தனிமுளை நெடுத்து வளர்ந்து இருந்தால் அம்முளையை உடைத்துவிடவும். உடைத்து இரு கிழமைகளில் புதுமுளைகள் அரும்பும். விதைகிழங்கு ஒவ்வொன்றிலும் ½ அங்குல வளர்ச்சியுடைய திடகாத்திரமான 2—6 முளை அரும்புகள் இருத்தல் வேண்டும். 4—6 முளை அரும்புகள் இருந்தால் கூடிய விளைச்சல் பெறலாம். முளை அரும்புகள் இல்லாத கிழங்கை நடும்போது முளைப்பதந்து நாட்செல்வதுடன் தொடர்ந்து மழை பெய்யுமாயின் நடப்பட்ட கிழங்குகள் அழுகவும் ஆரம்பிக்கும். எனவே முளை அரும்பிய கிழங்குகளையே நடுகைக்குப் பாவித்தல் முககியமானதாகும். ★

# யாழ். வலயப் பாடசாலைகளில் கட்டாயக் கல்வித் திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் கிழ் உள்ள பாடசாலைகளில் அடுத்த ஆண்டு முதல் கட்டாயக் கல்வியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்தை நடைமுறைப் படுத்த ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்திபெற்ற — சேவை மனப்பான்மையுள்ள — 50 இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனவும் —

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம், நல்லூர் மற்றும் கோப்பாய் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கட்டாயக் கல்வி முறையை நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

கல்வி, உயர்கல்வி அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

(ஐ—7)

## நாளை

ஐப்பசி 28
**திங்கட்கிழமை**
திதி: துதியை
பின்னிரவு 12.50 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
பின்னிரவு 3. 42வரை
சுபநேரம்: 12 07—1.37
ராகுகாலம்: 7.37 9 07
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## திருவாசக முற்றோதல்

தென்மராட்சி, நவ 12

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினரும், திருவருட்சுரபி வித்தகம் அமைப்பும் இணைந்து எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6. 00 மணி முதல் அல்வாய் மாலுசந்திப் பிள்ளையார் ஆலயத்தில் திருவாசக முற்றோதலை நடத்தவுள்ளன.

திருவாசக முற்றோதலை அடுத்து ஸ்ரீராமச் சந்திர சர்மாவின் சமயச் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது. (ஐ-117)

## முறிந்த மின்கம்பம்

கொக்குவில், நவ. 12

ஈவினைப் பகுதியில் புதிதாக நடப்பட்ட மின்கம்பம் ஒன்று வீதிக்குக் குறுக்காக முறிந்து வீழ்ந்த நிலையில் நீண்ட காலமாக உள்ளது.

தரைக்கு அண்மையாக முறிந்த இந்த மின்கம்பம் வீதிக்கு எதிரேயுள்ள வேலியினால் தாங்கப்பட்டுத் தரைக்குச் சமீபமாகச் சரிந்துள்ளது. இதன் விளைவாக இவ் வீதியால் சைக்கிள்களோ வாகனங்களோ செல்ல முடியாதுள்ளது. (இ—69)

## பஸ் நிலையத்தில் திருத்தவேலைகள்

அச்சுவேலி, நவ. 12

அச்சுவேலி பஸ் நிலையம் பல லட்சம் ரூபா செலவில் புனருத்தாரணம் செய்து திருத்தி அமைக்கப்படுகின்றது. நீண்டகாலமாக திருத்தப்படாமல் இருந்து வந்த அச்சுவேலி பஸ்நிலையப் பகுதி திருத்தி அமைக்கப்பட்டு நிலப்பகுதி உயர்த்தப்பட்டு தார் போடப்படுகின்றது.

வலி. கிழக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் அச்சுவேலி உப அலுவலகத்தினால் திருத்த வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. (இ-1.)

### உதயவாக்கு

சோம்பல் நியகுணங்களை பேணி வளர்க்கும் செவிலித் தாயாகும்; செயல் புரிவதை அரித்துக் கரைக்கும் துருவாகும்.

— பிராங்க்ளின்

## மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
## தரம் 6 அனுமதி

*விண்ணப்ப முடிவுதிகதி — 20-11-2000*

புலமைப்பரிசில் பரீட்சை, வலய மட்ட 3 ஆம் தவணைப் பரீட்சை. புள்ளிகள் அடிப்படையில் மாணவர் தெரிவு செய்யப்படுவர்.

அதிபர்
மகாஜனக் கல்லூரி
(80452)


## ஓய்வூதியம்

தென்மராட்சி, நவ. 12

தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கான நவம்பர் மாத ஓய்வூதியம் அந்தந்த வங்கிகளில் வழங்கப்படுவதாகப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (ஐ-117)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28-06-1910

மறைவு
08-11-1995

### அமரர் கு. குழந்தைவேலு
(இளைப்பாறிய அதிபர்)

*திதி:- 12—11—2000*

அன்பு, பண்பு, பாசத்தின் உறைவிடமாக இருந்து எம்மை எல்லாம் நல்வழி நடத்தி வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! ஓராயிரம் ஆண்டு கழிந்தாலும் உங்கள் நினைவு எங்கள் மனதை விட்டு அகலாது!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி (மீனாம்பிகை)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
குலேந்திரன் (மகன்)
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(80371)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சை-1998
## வணிகமாணி பகுதி 1 - 1999 வெளிவாரி

மேற்படி பரீட்சை மார்கழி மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகின்றது. இப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தங்களது அனுமதி அட்டை, நேர அட்டவணை ஆகியவற்றை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்.
பல்கலைக்கழகம்.
2000. 11. 10
(சி/13794)



## முதலாண்டு நினைவுப் பூக்கள்



மண்ணுலகில்; 11 — 06 — 1974
மண்ணுக்காக 11 — 11 — 1999

### அமரர் தெ. விஜயரூபன் (கமலன்)

நண்பா!

நீ மௌனமாய் மரணித்தது. மாலைகளுக்கும் பாமாலைகளுக்கும் மட்டுமே வெறுமையாகலாம் — ஆனால்
உன் வரலாறு நிதானமாக எழுதப்பட்டுள்ளது.
எம் மண்ணில் காலம் அள்ளுண்டு போனாலும்
உன் கனவுகள் நனவாகும் காலம் வெகுதூரமில்லை.
எதிர்பாராத விதமாக எமைவிட்டுப் பிரிந்தாய்
மனதுக்குள் மட்டும் ஊமைகளாய் அழுதுமௌனித்து
நின்றோம் என்றாலும் மறக்கவில்லையடா!
உன் நினைவுகளையும் இலட்சியத்தையும்
நாளைய தேசத்தின் விடியலில் விழித்திருப்போம்.
முதல் தீபம் உனக்காக ஏற்ற.. கமலனே!
கண் துயிலடா! அன்னை மடியில் அமைதியாக.

உன் இணைபிரியா
நண்பர்கள்.

சாவகச்சேரி.
(80373)



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலிகள்



மலர்வு 1941 — 04 — 05
உதிர்வு 1998 — 11 — 05

### அமரர் மாணிக்கம் அருமைலிங்கம்

*திதி: 2000 — 11 — 12 ஞாயிறு*

அப்பா! உங்களை இழந்தோம்; வாழ்ந்த மனை விட்டோம். ஈராண்டுகளாய்க் கண்ணீர்க்கடலில் மூழ்கிக் கரை காணமுடியவில்லை. உங்கள் முதல் மகள் ஜெயந்தி திருமணம் முடித்து சீர்மை சென்றுள்ளார். உங்கள் ஆத்மா அவர்களையும் வாழ்த்த வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

குடும்பத்தினர்

14, திருமகள் வீதி,
அரியாலை மத்தி,
யாழ்ப்பாணம்.
(80430)



## ஊர்காவற்றுறைப் பிரதேச சபை
## சந்தைகள், கடைகளுக்கான
# கேள்வி அறிவித்தல் 2001

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01-01-2001 முதல் 31-12-2001 வரையான காலப் பகுதிக்குக் குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 28-11-2000 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே பிற்பகல் 2. 00 மணிக்கு கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத் தருணத்தில் கேள்விக்காரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் 27-11-2000 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்ட கேள்வி வைப்புப்பணம், கேள்விப்படிவக் கட்டணம் ஆகியவற்றைப் பணமாகச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | குத்தகை விவரம் | கேள்விப்பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக் கடை இல. 01 (மாத வாடகை 150/-அறவிடப்படும்) | 100/- | 1000/- | 50.000,00/- |
| 02. | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக் கடை இல. 02 (மாத வாடகை 150/- அறவிடப்படும்) | 100/- | 1000/- | 50,000,00/- |
| 03. | நாரந்தனை மாட்டிறைச்சிக் கடை(கடையை தாங்களே அமைத்துக்கொள்ளவேண்டும்) | 100/- | 750/- | 35,000,00/- |
| 04. | ஊர்காவற்றுறை மீன் சந்தை | 100/- | 750/- | 35,000,00/- |
| 05. | நாரந்தனை மீன் சந்தை | 100/- | 250/- | 5,000,00/- |
| 06. | புளியங்கூடல் மீன் சந்தை | .100/- | 250/- | 2,000.00/- |
| 07. | ஊர்காவற்றுறை ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 20,000,00/- |

திரு. கு. கணேசலிங்கம்,
செயலாளர்,
ஊர்காவற்றுறைப் பிரதேச சபை,
ஊர்காவற்றுறை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
10-11-2000
(சி/13795)



## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் கல்வி பயிலும் சக மாணவன்

### திரு. ச. யசிதரனின்

அன்புத்தாயார்

### திருமதி பராசக்தி சபாநடேசன்

அவர்களின் பிரிவு கேட்டு துயருறுவதுடன் அவரது குடும்பத்தாரது துயரில் பங்கு கொள்கிறோம்.
அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மாணவர்கள்
2001 வணிகமுதற்தேர்வு
பட்டப்படிப்புகள் கல்லூரி.
(80459)

# ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தை தனித்துவமாக வளர்த்த முன்னோடிகளில் முதன்மையானவர்

**தனது எண்பத்தெட்டாவது வயதில் லண்டனில் சமீபத்தில் காலமான சோ.சிவபாதசுந்தரம் உலகப் புகழ்பெற்ற இலங்கைத் தமிழ் எழுத்தாளர். யாழ்ப்பாணம் கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் தன் எழுத்தாற்றலாலும் ஆராய்ச்சி வன்மையாலும், ஒலிபரப்பின் நுட்பங்களை நன்குணர்ந்து அதன் மூலம் தன் விசேட ஆளுமையை வெளியிட்ட தன்மையாலும், தமிழ் கூறும் நல்லுலகின் பாராட்டுக்கும் மதிப்புக்கும் ஆளாகியவர். இலங்கையிலே தேசிய இலக்கியம் காலூன்றுவதற்கு உறுதுணையாக இருந்த அவரின் பணிகளை ஆராயும் இக்கட்டுரையை, அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், 'மறுமலர்ச்சி' (மே, 1999) இதழிலிருந்து மறுபிரசுரம் செய்கின்றோம்.**

இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம் பற்றிப் பேசுவோரும் மதிப்பீடு செய்வோரும் ஈழத்துத்தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் பலவற்றைக் குறிப்பிட்டும், ஒப்பிட்டும், சிறப்பித்தும் கூறும் அளவுக்கு இந்த நாட்டிலே நவீன தமிழ் இலக்கியம் தனித் தன்மையுடன் வளர்ந்துள்ளது; செழித்துள்ளது; உயர்ந்துள்ளது.

சுற்றியுள்ள மக்களை மறந்து சுகபோக கனவுகளில் மயங்கிக் கொண்டும், மற்றவர்களை மயக்கிக் கொண்டுமிராமல் அந்த மக்களின் வாழ்க்கைக் கோலங்கள், ஏக்கங்கள், இலட்சியங்கள், உறவுச் சிக்கல்கள், பொருளாதாரப் பிரச்சினைகள், சமூக முரண்பாடுகள் போன்றவற்றை அனுதாபத்துடன் ஆழமாகவும் நுட்பமாகவும் பார்த்து, இருப்பவற்றையும் இருக்க வேண்டியவற்றையும் அந்த மக்களின் மொழியிலே மண்வாசனை கமழக் கலை நயத்துடன் இலக்கியமாக்கும் எழுத்தாளர்கள் பலர் இங்குள்ளனர்.

இவர்கள உருவாகுவதற்கு உழைத்தவர்கள் பலர்; உதவியவர்கள் பலர்; சாதகமாக இருந்த சூழ்நிலைகளும் பல.

எனினும் நல்ல பல எழுத்தாளர்களை உருவாக்க வேண்டும்; அவர்களால் தமிழ் இலக்கியம் வலிவும் வனப்பும் உடையதாகத் திகழ வேண்டும் என்ற இலட்சியப் பிடிப்புடன், தொலைநோக்குடன் உறுதியான அத்திவாரமிட்டவர்கள் யார்? திறமைசாலிகளை இனங்கண்டு, களம் அமைத்துக் கொடுத்துக் கைதூக்கிவிட்டவர்கள் யார்? செல்நெறியை உணர்த்தி, வழிகாட்டி வளர்த்து விட்டவர்கள் யார்? என்பவற்றைப் பற்றிச் சிந்திக்கும்போது முன்னணிக்கு வருபவர்கள் சோ.சிவபாதசுந்தரம், அமரர் இராஜ - அரியரத்தினம், எஸ்.டி.சிவநாயகம் ஆகிய மூவருமே.

இவர்களுள் மூத்தவர் சோ.சிவபாதசுந்தரம் 'ஈழகேசரி' ஆசிரியராக இருந்து இவர் தொடக்கி வைத்த பணியை மற்றைய இருவரும் தத்தம் காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பத் தொடர்ந்தார்கள்.

1930 ஆம் ஆண்டில் சுன்னாகத்திலிருந்து 'ஈழகேசரி' வாரஇதழ் வெளிவரத் தொடங்கியது. இந்திய அரசியல் அரங்கிற் காந்தியடிகளின் பிரவேசம், காந்தியடிகள் ஜவஹர்லால் நேரு கமலாதேவி சட்டோபாத்யாய, திரு.வி.க. போன்ற பெருந் தலைவர்களின் இலங்கை வருகை ஆகியவை ஏற்படுத்திய எழுச்சிக்கும் புத்துணர்ச்சிக்கும் உட்பட்டிருந்த குரும்பசிட்டி நா.பொன்னையா "நமது நாடு அடிமைப் படுகுழியிலாழ்ந்து அன்னியர் வசப்பட்டு, அறிவிழந்து, மொழிவளங்குன்றி, சமயமிழந்து, சாதிப்பேய்க்காட்பட்டு, சன்மார்க்க நெறியிழந்து, உன்மத்தராய், மாக்களாய் உண்டுறங்கி வாழ்தலே கண்ட காட்சியெனக் கொண்டாடுமிக்காலத்தில் எத்தனை பத்திரிகைகள் தோன்றினும் மிகையாகாது" என்ற அறிவிப்புடன் 'ஈழகேசரி' யை ஆரம்பித்து, எட்டு ஆண்டுகள் அதன் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

1938ஆம் ஆண்டில் 'ஈழகேசரி' யின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றார் சோ.சிவபாதசுந்தரம்.

பள்ளி மாணவனாக இருந்த காலத்திலேயே தமிழ்நாடு, ஆனந்த போதினி, திரு.வி.க.வின் நவசக்தி, பெரியாரின் குடியரசு முதலிய பத்திரிகைகளையும் பின்னர், அமிர்தகுண போதினி, செந்தமிழ்ச்செல்வி, ஆனந்த விகடன், பிரசண்ட விகடன், ஈழகேசரி, வீரகேசரி முதலியவற்றையும் வாசிப்பதையும் அவற்றில் வெளியான கருத்துக்களைப் பற்றிச் சிந்திப்பதையும் வழக்கமாக்கிக் கொண்டிருந்தவர் சோ.சி; தமிழ்ச் சொற்கள் சம்பந்தமான ஆராய்ச்சியிற் சிறந்து விளங்கிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், 'ஈழகேசரி'யில் வெளியிட்ட சில கருத்துக்களை மறுத்து எழுதிக் கற்றறிந்தோரின் கவனத்துக்கு உள்ளானவர்; முதன் முதலில் தன்னுடைய கட்டுரையை அச்சிற் கண்டபடியாலும், தன்னை ஒரு பொருளாக மதித்துச் சுவாமி ஞானப்பிரகாசர் பதில் எழுதியதனாலும் உற்சாகமடைந்து 'ஈழகேசரி'க்கும் 'வீரகேசரி'க்கும் கதைகள், கட்டுரைகள் எழுதித் தன் எழுத்தாற்றலை நிறுவிக்கொண்டவர்; 'ஆனந்த விகடன்' இதழில் வெளியான 'தோட்டத்து மீனாட்சி' என்ற சிறுகதையால், மிகப் பரந்த வாசகர் வட்டாரத்துக்கு அறிமுகமானவர்; பாரதி ஏற்படுத்திய தமிழ இலக்கிய மறுமலர்ச்சி மேலும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் எனத் தீவிரமாகப் பாடுபட்ட 'மணிக்கொடி' குழுவினரிலும், அவர்களுட் சிறப்பிடம் வகித்த வ.ரா.என்ற வ.ராமஸ்வாமி ஐயங்காரிலும் பற்றும் மதிப்பும் வைத்திருந்தவர்; 'மணிக்கொடி'யிலிருந்து விலகி 'வீரகேசரி'யின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக் கொழும்புக்கு வந்த 'வ.ரா'வை வரவேற்று, கொழும்பிலே தான் தங்கியிருந்த அறையிலே அவரையும் தங்கச் செய்து இலக்கிய உரையாடல், கருத்துப் பரிமாற்றம் மூலம் தன் இலக்கிய ஆளுமையை வளர்த்துக் கொண்டவர்.

இந்தப் பின்னணியில் வந்த சோ.சிவபாதசுந்தரம் 'ஈழகேசரி'யின் ஆசிரியரானதும் அதன் இலக்கியப் பார்வையில் ஒரு கூர்மையும் இலக்கியப் பணியில் ஒரு வேகமும் ஏற்படத் தொடங்கின.

நா.பொன்னையா ஆசிரியராக இருந்த காலத்தில் 'ஈழகேசரி'யில் அரசியல் செய்திகளுக்கும் கட்டுரைகளுக்குமே முதலிடம் அளிக்கப்பட்டிருந்தது. சமய, இலக்கியக் கட்டுரைகள் ஓரளவு பழமையைத் தழுவினவையாகவும் ஆராய்ச்சித் தன்மை கொண்டவையாகவும் இருந்தன.

வித்துவசிரோமணி கணேசையர், அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள், சோமசுந்தரப் புலவர், நவநீத கிருஷ்ண பாரதியார், முது தமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி, சோ.இளமுருகனார், சோ.நடராசன், பண்டிதர் கா. பொ.இரத்தினம் போன்ற பண்டிதர்கள் வித்துவான்களே அதிகளவில் எழுதினர். 'பவளகாந்தன் அல்லது கேசரி விஜயம், அருணோதயம் அல்லது சிம்மக்கொடி' போன்ற நாவல்கள், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை மொழி பெயர்த்த உமர்கய்யாம் பாடல்கள், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் ஆகியோரின் பாடல்கள் 'ஈழகேசரி'யில் வெளிவந்தபோதிலும் சோ.சிவபாதசுந்தரம் ஆசிரியரான பின்னரே நவீன இலக்கியக் கொள்கைகளும் போக்குகளும் 'ஈழகேசரி'யில் அதிக அளவிலும் தெளிவாகவும் பிரதிபலிக்கத் தொடங்கின.

"யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்றபடி 'மணிக்கொடி'யின் ஆசிரியர் வ.ரா.



கொழும்புக்கு வருமுன்னே இலங்கையிலிருந்த அந்தக் காலத்து இளம் எழுத்தாளர்களுக்கு 'மணிக்கொடி' சஞ்சிகையின் இலக்கியக் கொள்கையிலும் எழுத்து நடையிலும் ஒரு ஈடுபாடு ஆரம்பித்துவிட்டது. நடைச் சித்திரம் என்று பின்னால் புத்தக ரூபமாக வந்த வ.ரா.வின் எழுத்து, அவரைப்பற்றிய முற்போக்குக் கொள்கையை, சங்க இலக்கிய சம்பிரதாயத்தில் வளர்க்கப்பட்ட ஈழத்து எழுத்தாளர்களுக்கு ஒரு புதிய பாதையை வகுத்துக் கொடுத்தது. இலங்கையர்கோன், வைத்திலிங்கம் போன்ற எழுத்தாளர்கள் இந்தப் புதிய வேகத்திற் கவரப்பட்டார்கள். கு.ப.ராமுவும், புதுமைப் பித்தனும், சிட்டியும், பிச்சமூர்த்தியும் அறிமுகமாகிவிட்டனர். இந்த வேகம்தான், பழைய மரபில் நடந்து கொண்டிருந்த யாழ்ப்பாணத்து 'ஈழகேசரி'யின் ஆசிரியப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டபோது 'மணிக்கொடி' மரபைப் பின்பற்ற நேர்ந்ததும் நூற்றுக்கணக்கான புதிய எழுத்தாளர்கள் இலங்கையில் வளர உந்துதல் அளித்ததும் எனலாம் எனச் சிவபாதசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதை (கண்ணன் என் கவி: இரண்டாம் பதிப்பு; 1981; கு.ப.ரா; சிட்டி) நினைவூட்டுவது பொருத்தமாயிருக்கும்.

ஆனந்தவிகடன், கலைமகள் ஆகிய பத்திரிகைகளும் பாரதி பரம்பரையினரின் கதைகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டன; இப்பத்திரிகைகளுக்கு இலங்கையிலே அதிக செல்வாக்கும் இருந்தது. எனினும் இங்குள்ள எழுத்தாளர்களிடையே 'மணிக்கொடி'க்கு ஒரு சிறப்பிடம் இருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். ஈழத்து எழுத்தாளர்களுக்குப் புதிய பாதையைக் காட்டியது 'மணிக்கொடி'; 'ஈழகேசரி' மூலம் அந்தப் பாதையில் இந்த எழுத்தாளர்களை இட்டுச் சென்றவர் சோ. சிவபாதசுந்தரம் எனச் சொல்வது மிகையன்று.

'ஈழகேசரியின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றவுடனேயே, பண்டிதர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெண்கள் போன்ற பல்வேறு பிரிவினரின் கைவண்ணங்களையும் காட்டும்படி அவர்களுக்கு அழைப்பு விடுத்தார் சிவபாதசுந்தரம்.

இலங்கையிலே தமிழ்ச் சிறுகதையின் முன்னோடிகள் எனக் குறிப்பிடப்படும் இலங்கையர்கோன், சி.வைத்திலிங்கம்,சம்பந்தன் ஆகிய மூவரின் சிறுகதைகள் சில ஏற்கனவே தென்னிந்தியப் பத்திரிகைகளில் வெளிவந்துவிட்டன; சென்னை அல்லயன்ஸ் கம்பனி வெளியிட்ட 'கதைக் கோவை'த் தொடரிலும் இவர்களின் கதைகள் இடம்பெற்றிருந்தன. சோ. சிவபாதசுந்தரத்தின் தூண்டுதலால் இவர்கள் 'ஈழகேசரி'யிலும் கதைகள் எழுதத் தொடங்கினர்.

ஈழத்து எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகள் எனக் குறிப்பிடப்படுபவற்றுட் சில இவர் காலத்திலேயே 'ஈழகேசரி'யில் வெளிவந்தன. தண்ணீர்த் தாகம் (ஆனந்தன்) கற்சிலை (சோ.நடராஜன்) வண்டிற் சவாரி (அ. செ.முருகானந்தன்) வெள்ளிப் பாதசரம் (இலங்கையர்கோன்) எதிர்பாராதது (பரிதி) நெடுவழி (சி.வைத்திலிங்கம்) கலாஷேத்திரம் (சம்பந்தன்) ஆகியவையே அவை.

K.V.செல்லத்துரை எழுதிய 'சுசீலா', வில்லன் என்பவர் எழுதிய 'மல்லிகை', க.சச்சிதானந்தன் எழுதிய 'அன்னபூரணி' ஆகிய நாவல்கள் தொடராக வெளியிடப்பட்டன. இம்மூன்றினுள், 'அன்னபூரணி' சிறந்ததாகக் கருதப்படுகின்றது. ஆனந்தன் என்ற பெயரில் 'தண்ணீர்த் தாகம்' என்ற சிறுகதையை எழுதியவரும் 'அன்னபூரணி' நாவலை எழுதிய சச்சிதானந்தனும் ஒருவரே. ஈழத்தின் தலைசிறந்த கவிஞராகவும் பல்துறை அறிஞராகவும் இன்றும் எம்மிடையே வாழ்ந்துவரும் இந்த சச்சிதானந்தன் (பண்டிதர்) 'யாழ்ப்பாணக் காவியம்' என்ற சிறந்த காவியத்தைச் சமீபத்தில் வெளியிட்டு வரலாறு படைத்துள்ளார்.

சிறுகதை, நாவல் வடிவங்களை நாம் மேல் நாடுகளிலிருந்தே பெற்றுக்கொண்டோம். மேல் நாட்டாரின் கதைகளை வாசிப்பதன் மூலம் அவர்கள் கையாளும் உத்தி, கதையை வளர்த்துச் செல்லும் முறை, பாத்திரப் படைப்பு, அழகுணர்ச்சி போன்றவற்றை அறியமுடியும். இதற்கேற்ப, இலங்கையர்கோன் மொழிபெயர்த்த 'வெறுங்கதை' (தொமஸ் ஹார்டி), 'கிளாறாவிச்' (ஐவன்துர்கனேவ்) சி. வைத்திலிங்கம் மொழிபெயர்த்த 'மாலை வேளையில்' (ஐவன்துர்கனேவ்) சோணாசலம் என்ற பெயரிலே சோ.சி.மொழி பெயர்த்த மன விகாரம் (தோமஸ் மான்), ஆகிய மேல்நாட்டு நாவல்களை இவர் தொடராக வெளியிட்டார்.

புதிய எழுத்தாளர்களை உருவாக்குவதற்காகச் சோ.சி.மேற்கொண்ட பணி, வேறு எந்தப் பத்திரிகையும் செய்யாத, செய்ய நினைத்திராத புதுமையான ஆக்கபூர்வமான பணியாகும். எழுத்தார்வம் மிக்கவர்களையும் மாணவர்களையும் ஒன்று சேர்த்து 'ஈழகேசரி இளைஞர் சங்கம்' ஒன்றை நிறுவினார். சங்க உறுப்பினர்களுக்கென நான்கு பக்கங்களிலே கல்வி அநுபந்தத்தை ஈழகேசரியுடன் சேர்த்து வாரந்தோறும் வெளியிட்டார். இது கல்வி சம்பந்தமானதாக மட்டும் இருக்கவில்லை; மாணவர்கள், இளைஞர்களின் புதிய, சிறிய ஆக்கங்களும் இதில் இடம்பெற்றன. ஆலோசனை கூறி உற்சாகப்படுத்திப் பல இளைஞர்களை எழுதவைத்தார் சிவபாதசுந்தரம். ஆண்டு முடிவிலே கல்வி மலர் ஒன்றை வெளியிட்டார்; பேச்சுப்போட்டி, எழுத்துப் போட்டி ஆகியவற்றை நடத்தினார். வைத்தீஸ்வர வித்தியாலயத்திலே ஆண்டு விழாவைச் சிறப்பாக நடத்தினார். இலக்கியப் பற்றும் எழுத்தார்வமும் கொண்ட இளைஞர்கள் 'ஈழகேசரி' ஆசிரியருடன் மூத்த எழுத்தாளர்களுடனும் ஒன்றுகூடி அளவளாவி கருத்துப் பரிமாற்றம் செய்தமை இளைஞர்களிடையே எழுச்சியையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தியது. பிற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மறுமலர்ச்சிச்சங்கம் அமைத்து மறுமலர்ச்சி என்ற மாத இதழை மூன்றாண்டுகள் வரை வெளியிட்டு இலக்கிய உலகில் சாதனை புரிந்தவர்களுட் பலர் 'ஈழகேசரி' இளைஞர் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்து எழுதப் பழகியவர்களே.

'ஈழகேசரி'யின் இலக்கியப் பணிக்கு அணிசேர்த்த இன்னோர் சிறப்பம்சம் இலக்கிய விமர்சனம். எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் ஒரே நேரத்தில் பல்வேறு பயன்களை அளிக்கும் சக்தி நடுநிலை விமர்சனங்களுக்கு உண்டு. நல்ல அம்சங்கள் பாராட்டப்படும்போது எழுத்தாளர்கள் உற்சாகம் அடைகிறார்கள். குறைபாடுகள் நயமான முறையில் சுட்டிக்காட்டப்படும்போது அவற்றில் உண்மை ஒளியிலே தம்மை மீள் ஆய்வுசெய்து தேவை ஏற்படின் தம் போக்கை மாற்றும் பக்குவத்தை அடைகிறார்கள். எழுதவேண்டும் என்ற ஆர்வத்துடன் இருக்கும் புதிய எழுத்தாளர்களுக்கு நடுநிலை விமர்சனங்களும் நல்ல வழிகாட்டிகள் ஆகின்றன. எதை விடுவது, எதை வாசிப்பது எனத் தடுமாறும் வாசகர்களுக்கு நல்ல நூல்களைத் தெரிவு செய்வதில் இவை துணைபுரிகின்றன.

(தொடரும்)

# சிந்து நடைக் கூத்தாக தாவீதின் வீர வரலாறு

சிறியவனான தாவீது பெரியவனான கோலியாத்தை வென்ற வரலாறு கிறிஸ்தவத் திருமறையிற் காணப்படும் உணர்ச்சியூட்டும் சம்பவங்களில் ஒன்று. கோலியாத்தின் உயரம் பத்து அடி ஆறு அங்குலம். ஆடுமேய்க்கும் சிறுவனாகிய தாவீது கவண் வீசிக் கல்லெறிந்து அவனைக் கொன்றான். இந்த வெற்றியை கர்த்தரே தமக்களித்தார் என்று இஸ்ரவேலர் இன்றுவரை கொண்டாடி வருகின்றனர்.

மெய்சிலிர்க்க வைக்கும் இந்த வரலாற்றை பக்திச்சுவை நனி சொட்டும் வண்ணம் சிந்துநடைக் கூத்தாக அமைத்துள்ளார் பிரபல எழுத்தாளரும் கவிஞருமாகிய நவாலியூர் நா. செல்லத்துரை அவர்கள்.

இந்தக் கூத்தில் வரும் பாடல்கள் ஆசிரியரின் எண்ணக் குமுறல்களையும் எமது நாட்டின் இன்றைய துன்பங்களையும் அடக்குமுறைகளையும் எடுத்துக் கூறுகின்றன.

*தாவீது:* ஒரு இனத்தைக் கிண்டல் செய்வதற்கு...... இவன் யார்?

*அபி:* உனக்கு அது தெரிய வேண்டியதில்லை.

*தாவீது:* நீங்கள் வாழ்ந்தவர்கள் ....... நாங்கள் வாழவேண்டியவர்கள். ஆகவே ........ நீங்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். அந்தப் பதிலை நான் அறிந்து தான் ஆக வேண்டும். எதிர்கால் வாழ்வுக்காக! நன்மைக்காக!!

இந்த வீர உரைகளில் ஆசிரியரின் சத்திய ஆவேசம் புலனாகின்றது அல்லவா?

கோலியாத்தை நேருக்கு நேர் சந்தித்த தாவீது பின்வருமாறு கூறுகின்றான்:-

"அன்றைக்குன்னை மோத எவரும் அகப்படாத எண்ணமோ அடுத்த இனத்தை அடிமையாக்கும் ஆசையில்லை எமக்கடா மண்டைக்குள்ளே சரக்கு இல்லா மூடா இதைக்கேளடா இனியும் விட்டு வையேன் இனி இதர விளைவை எண்ணடா"

தாவீது கோலியாத்தின் கதை திரும்பத்திரும்ப நாம் படித்த, கேட்ட வரலாறு. பல முறை நாடகமாக மேடையேறியது. ஆனால் முதல் முறையாக சிந்து நடைக்கூத்தாக இதனைத் தந்திருப்பவர் நவாலியூர் நா. செல்லத்துரையேயாகும். அது மட்டுமன்றி காத்தான் கூத்தையடுத்து நூலுருவில் வந்திருக்கும் முதலாவது சிந்து நடைக்கூத்து இதுவாகும்.

## கலைச்சுடர்

சிந்துநடைக் கூத்தை எழுதுவதில் மட்டுமன்றி, அதனை ஆடிக்காட்டுவதிலும், நெறியாழ்கை செய்வதிலும் தமது திறமையைக் காட்டியுள்ளார். நவாலியூர் நா. செல்லத்துரை. கலைக்குத்தம்மை முற்றாக அர்ப்பணித்த கவிஞர் திலகம், தமது நேரத்தையோ பொருள் செலவையோ பெரிதாகக் கருதாது பல மணி நேரத்தை நாடகங்களை நடிப்பதிலும் பயிற்றுவிப்பதிலும் செலவிடுவார், அவர் வாழ்வு ஒரு கலைஞனின் வாழ்வு.

வட்டுக்கோட்டை லீலை ஸ்போட்டிங் இல்ல மாணவர்கள் இந்தக்கூத்தினை அண்மையில் நடித்துக் காட்டினர். தென்னிந்திய திருச்சபையின் வருடாந்தக் கூட்டத்தின் கலைநிகழ்ச்சிகளில் ஒன்றாக சின்னவனா? பெரியவனா? கூத்து இடம்பெற்றது.

கவிதையிலும் நடிப்பிலும் மட்டுமல்ல, நெறியாள்கையிலும் இசையிலும் பரந்த ஆற்றல் பெற்ற நவாலியூரார் சரியான நடிகர்களைத் தேர்ந்தெடுத்தல், கூத்தின் அம்சங்களைப் போதித்தல், சுருதி பிசகாதபடி அசைவுகளைக் காட்டுதல் என்பவற்றினால் இதனை ஒரு பெரு வெற்றியாக்கினார்.

சிந்து நடைக்கூத்தினை முன் எப்போதும் பார்த்திராத பார்வையாளர் பலர் பரவசமாகினர். கோலியாத்தையும் தாவீதையும் முகம் முகமாகச் சந்திப்பது போன்ற உணர்ச்சி மேலிடவே, கரகோசம் வானைப்பிளந்தது. கோலியாத்தை தாவீது கொன்ற வரலாற்றினை அறியாத கிறிஸ்தவர்கள் இருக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சிந்து நடைக்கூத்தில் கோலியாத்தாக நடித்த எம்.ஜெயரஞ்சன் ஒருசிறந்த நடிகர் கலையுலகில் அவருக்கு ஒரு சிறந்த எதிர்காலமிருக்கிறதென்பது வெள்ளிடைமலை. தாவீதாக நடித்தவர் அ.அருள்ராஜ் இசை, நடிப்பு இரண்டும் இவருக்கு லாவகமாக இருந்தது. சவுல் மன்னனாக நடித்த ரஜீபசன் பாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ளார். கூத்துக்கான ஒப்பனையை திரு.தைரியநாதன் பொறுப் பேற்றிருந்தார்.

கிறிஸ்தவ சமயத்தை சுதேச நிலைப்படுத்துவதில் இந்த சிந்து நடைக்கூத்து ஒரு முக்கியமான மைல்கல்.கிறிஸ்தவ திருச்சபையினரும், தமிழ் அன்பர்களும், கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரைககு கடமைப்பட்டவர்களாவர்.

**பேராயர்**
**எஸ்.ஜெபநேசன்**

## பல்கட்டுதல், கிளிப்போடுதல்

சீன முறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவரால் சிறந்த தர மான சங்குப்பற்கள் அழகிய முறையில் கட்டிக் கொடுக்கப்படும். மற்றும் சிறப்பான முறையில் மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து கொடுக்கப்படும். கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்:

### எரிக்கணேஷ்

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No. 2486



*கிளை:*
91, கே.கே.எஸ். றோட்,
கொக்குவில் சந்தி,
(C/13786) கொக்குவில்.



## ST.PATRICK'S COLLEGE OLD BOYS' ASSOCIATION JAFFNA

### வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்


10-12-2000 ஞாயிறு காலை 10.30 மணிக்கு பழைய மாணவர் சங்கப் பணிமனையில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும் என்பதனைச் சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

அங்கத்தவர்களிடம் இருந்து பிரேரணைகள், நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவுக்கான நியமனங்களை முறைப் படி செயலாளரிடம் அல்லது சங்கப் பணிமனையில் 30.11.2000 இற்கு முன் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

– *கௌரவ பொதுச் செயலாளர்.*

*59, சென்.பற்றிக்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (80434)


# நினைவஞ்சலி



## அமரர் ச. சிதம்பரநாதர்

(உத்தரவுபெற்ற நில அளவையாளரும் முன்னாள் தென்மராட்சி விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளரும்)

| | |
|---|---|
| **அன்னை மடியில்** | **அம்மன் அடியில்** |
| **28-03-1942** | **15-10-2000** |

"சித்திரத் தேர் சிதைந்ததுவோ! சிரிக்கு முகம் மறைந்ததுவோ!
நித்தக் கவலையுடன் நிர்க்கதியாய் நிற்கிறோமே!"

எமது குடும்ப விளக்கு அணைந்தபோது கலந்துகொண்டு உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு (14.11.2000) செவ்வாய்க்கிழமை நடைபெறும் சபிண்டிகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

இடப்பெயர்வு காரணமாக நேரில் அழைக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

**திருமதி சறோஜினிதேவி** (மனைவி)
**அகிலன், இளங்கோ** (பிள்ளைகள்)
**சகோதரர்கள், உறவினர்கள்.**

*இரும்பு மதவடி,*
*யார்வத்தை,*
*வதிரி.* (13780)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,நவ.12

வலிகாமம் கல்வி வலய சண் டிலிப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடை யேயான 14 வயதிற்கு உட்பட்டோ ருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை திங்கட்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் நடை பெறவுள்ள அரையிறுதி ஆட்டங் களின் விவரம் வருமாறு:-

### 14 வயதுப் பிரிவு

மானிப்பாய் மெமோறியல் ஆங் கிலப் பாடசாலை எதிர் பண்டத் தரிப்பு சித்தி றோ.க.பாடசாலை.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் மாதகல் சென்.ஜோசப் வித்தி யாலயம். (ஐ-86)

* * *

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் கினால் உதை பந்தாட்ட மத்தியஸ் தர் அமரர் அ.தம்பிராசா ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக நடத்தப் படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட் டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மல் லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட் டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

நவாலி சென்.பீற்றர்ஸ் வி.கழகம் எதிர் அராலி எ.எல்.வி.கழகம்.

ஸ்கந்தா வி.கழகம் எதிர் சுழி புரம் விக்டோரியன் வி.கழகம்.(ஐ-86)

## புலிகள் மோட்டார் தாக்குதல்

கொழும்பு,நவ.12

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு பகுதிகளில் உள்ள படையினரின் நிலைகள் மீது விடுதலைப்புலிகள் கடந்த வியாழனன்று காலை நடத் திய மோட்டார் தாக்குதலில் மூன்று படையினர் காயமடைந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அதே தினம் அரியாலை மற்றும் கிளாலிப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் மூன்று விடு தலைப்புலி உறுப்பினர்கள் உயிரி ழந்தனர் என்றும் அது தெரிவித் துள்ளது. (இ.3)

## ஆய்வுப் பட்டறை

காரைநகர்,நவ.12

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பான 'விளைவுகள் பற்றிய கண்காணிப்பு' என்னும் ஒரு நாள் ஆய்வுப் பட்டறை நாளை திங்கட் கிழமை காலை 9.30 மணி தொடக் கம் 3.30 மணிவரை ஊர்காவற் றுறை புனித அந்தோனியார் கல்லூ ரியில் நடைபெற உள்ளதாக ஊர் காவற்றுறை உதவி அரசாங்க அதி பர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தெரி வித்துள்ளார். (ஐ-73)




### திவாகரன் - சுஜாதா தம்பதிகளின்

### செல்வப் புதல்வி [illegible]ண்யா

தனது முதலாவது பிறந்த தினத்தை [illegible]ந்திலுள்ள தனது இல்லத்தில் இன்று (12.11.2000) ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி தாரண்யாவை சுவ[illegible]லுள்ள அப்பா, அம்மா, பாபு சித்தப்பா, நல்லூரில் உள்ள அப்பம்மா, ரவி சித்தப்பா, ரஞ்சிதம் அத்தை, சுந்தரம் மாமா, பிரியா மச்சாள் மற்றும் வவுனியாவில் உள்ள அம்மம்மா, பெரியம்மா, பெரியப்பா, மாமாமார், மாமிமார்கள் அனைவரும் தெல்லிப் பழை துர்க்கா தேவியின் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சௌபாக்கியங்களுடன் வாழ மனமார வாழ்த்துகின்றனர்.

*17, செம்மணி வீதி,*
*நல்லூர்.* (80299)

**வை.க.ரவீகரன்**
(சித்தப்பா)


## இதோ வந்துவிட்டது!

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள், கண்கவரும் பல வர்ணங்களில் எம்மிடம் மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப் படும்.

**ALL CEYLON DISTRIBUTORS**
132, K.K.S. ROAD,
JAFFNA.
(80393)



## இலவசம்

**தேவனால் ஆகாத காரியம் ஏதுமில்லை**

வாழ்க்கையைப் பற்றிய கேள்விக் குறியோடு ஆறுதலைத் தேடி ஓடுகின்றீர்களா? சமாதானமும் ஆறுதலும் அருளும் நாதனாம் யேசுகிறிஸ்துவையும் அவரது நற்செய்திகளையும் இலவச வேதாகம பாடப்பயிற்சி நூலாக அறிந்து கொள்ள எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**எம்மாவு வேதாகம பாடசாலை,**
பெதஸ்தா சுவிசேஷ சபை,
இல.21, டிக்மன்ஸ் வீதி,
கொழும்பு - 5.
(80369)


உ
சிவமயம்

# விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் விக்கிரம வருஷம் ஐப்பசித் திங்கள் 28ஆம் நாள் நாளை (13.11.2000) திங்கட்கிழமை கிருஷ்ண துதியையும், றோகிணி நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய சுப யோக சுப தினத்தில் காலை 9.41 மணிமுதல் 11.02 மணிக்குள் (புதிய நேரம்) வரும் தனுர்லக்ன சுபமுகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| நல்லூர் ஸ்ரீகைலாசப்பிள்ளையார் தேவஸ்தானம், பிரம்மஸ்ரீ குருசாமிக் குருக்களின் பௌத்திரியும், பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மாவின் புத்திரியுமாகிய சௌபாக்கியவதி **விஜயாம்பிகையை** | மட்டு நகர், ச.பாலசுப்ரமணிய சர்மா தம்பதிகளின் பௌத்திரனும், ஜெகதீசன் தம்பதிகளின் ஏகபுத்திரனுமாகிய **விசாகனுக்கு** |

கன்னிகாதான, பாணிக்கிரஹண, திருமாங்கல்யதாரணம் நீர்கொழும்பு, 104, கடற்கரை வீதி, ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயிலில் நடைபெற நல்லூர் ஸ்ரீ கைலாசப் பிள்ளையாரின் அனுக்கிரகத்துடனும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகளின் ஆசியுடனும், பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் மேற்படி முகூர்த்தத்தில் தாங்கள் தங்கள் இஷ்டமித்ர குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: 13.11.2000 அதிகாலை 5.30மணிக்குமேல் நீர்கொழும்பு, 109, கடற்கரை வீதி இல்லத்தில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திருமதி கு.குமாரசுவாமி சர்மா | திருமதி சாராதாம்பா |
| பிரம்மஸ்ரீ கு.மணிக்குருக்கள் | ஸ்ரீ-ஸ்ரீமதி ஜெகதீசன் (ரமணி) சர்வேஸ்வரி தம்பதிகள் |
| ஸ்ரீ-ஸ்ரீமதி கு.கோபாலன்சர்மா தம்பதிகள் | ஸ்ரீ-ஸ்ரீமதி பத்மநாபன் மைதிலி தம்பதிகள் |
| பிரம்மஸ்ரீ கு.ஆனந்தகுருஸ்வாமி சர்மா | ஸ்ரீ-ஸ்ரீமதி ஹரிகேசன்சர்மா செந்திரு தம்பதிகள் |

சுபமஸ்து

*343, நாவலர் வீதி,*
*கைலாசப்பிள்ளையார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

*81, எல்லை வீதி,*
*மட்டக்களப்பு.*

இரு வீட்டார் அழைப்பு

(80029)

# சட்ட உலகில் அரசோச்சிய தனிப்பெரும் தமிழ்த் தலைவர்

**அகிலஇலங்கைத தமிழ்க் காங்கிரஸின் முன்னாள் தலைவர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 101 ஆவது பிறந்ததினம் கடந்த 8ஆம் திகதி கொண்டாடப்பட்டது. அதனை ஒட்டி இக்கட்டுரை வெளியீடப்படுகிறது.**

சட்ட உலகில் ஏறக்குறைய 50 வருடங்கள் அரசோச்சிய ஒரு தனிப் பெரும் தலைவனாக எம்மிடையே வாழ்ந்தவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள். அவர்கள் மறைந்து கால் நூற்றாண்டாகின்றது. சட்ட உலகில் அவர் பதித்த சுவடுகள் பல. கிரிமினல் வழக்குகளில் பல புதுமைகளை அவர் மேற்கொண்டார். உலகில் தலைசிறந்த பொலீஸ் அமைப்பான ஸ்கொட்லண்ட் பொலீஸார் கைரேகை தொடர்பான தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளக்கூடிய வகையில் அவரின் வாதங்கள் நீதிமன்றங்களில் அமைந்தன. சட்டங்களைக் கண்டு மனிதன் பயப்படுகின்றான். ஆனால் சட்டங்கள் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தைக் கண்டு பயந்தன. அந்த வகையில் இலங்கையில் தன்னிகரில்லாத ஒரு சட்டமேதையாக அவர் இருந்தார்.

தலைசிறந்த பேச்சாளன் ஒருவனது நா அசைந்தால் நாடு அசையும் என்பது பலரது கருத்தாகும். அந்த வகையில் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் பேச்சைக் கேட்கவென்றே பலர் ஆலாய்ப்பறந்து திரிந்தனர். அவர் காலத்தில் ஆங்கிலப் புலமை மிக்க அவர் ஆங்கிலேயரையே வியப்படையச் செய்தார். 1965 ஆம் ஆண்டு ஐ.நா.சபையின் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற புறநானூற்று அடிகளை எடுத்தியம்பி இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்பேயே எமது தமிழ் இலக்கியங்கள் உலக சமாதா



னத்தை வலியுறுத்தி இருந்தமையை அந்த உலகமன்றத்தில் கூறி தமிழின் தொன்மையை வெளிப்படுத்தினார். ஆங்கிலத்தில் அவர் ஆற்றிய உரையைக் கேட்டுக்கொண்டிருந்த அப்போதைய அமெரிக்க வெளிநாட்டமைச்சர் டீன்ரஸ்க் என்பவர் பொன்னம்பலத்தின் உரை முடிந்ததும் அவரைக் கட்டித்தழுவி அவரது புலமையை மெச்சிய சந்தர்ப்பம் தமிழருக்கு உயர்ந்த மரியாதையை உலகில் ஏற்படுத்திற்று.

இலங்கையின் அரசியல உலகில் ஏறக்குறைய 40 வருடங்கள தன்னை இணைத்துக்கொண்டவர் அவர். அவரது தாரகமந்திரமாக இருந்தது 'தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்பதேயாகும். இலங்கையின் அரசியலில் தென்னிலங்கைத் தலைவர்கள் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே தம்மினத்திற்குச் சார்பாக செயற்படத் தொடங்கிவிட்டனர். எம்மினத்திற்கு எதிரான செயற்பாடுகள் வளர்வதற்கு அன்றே அவர்கள் வித்துக்களைத் தூவினர். 1936 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல திட்டத்தின்கீழ் சர்வசிங்கள மந்திரிசபையை உருவாக்கி தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டன. 1938ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்க சபையில ஜீ.ஜீ.பொன்னம்பலம் மிக நீண்ட நேரம் பேசி சிங்களத் தலைவர்களின் போக்கினை வன்மையாகக் கண்டித்தார். சிங்களத் தலைவர்கள் தமது போக்கினை மாற்றிக் கொள்ளாவிட்டால் தமிழா தனிவழி செல்லத் தூண்டப்படுவர் என்பதை அப்போது அவர் வலியுறுத்தினார்.

**அ.குமாரவேல்**

தமிழ்களின பிரதிநிதித்துவத்தைக் குறைத்து அவர்களை அரசியலில் ஓரம் கட்டிவிடும் விளையாட்டை அப்போது சிங்களத் தலைவர்கள் கையாண்டனர். 1947ஆம் ஆண்டு சோல்பரி அவர்களின தலைமையில் இலங்கைக்குப் புதிய அரசியல் திட்டத்தை உருவாக்க வந்த குழுவிடம் 50:50 என்ற கோரிக்கையை ஜீ.ஜீ.பொன்னம்பலம் முன்வைத்தார். அந்த சாட்சியத்தில் டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் தமிழர்கள் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டனர் என்பதைப் பல ஆதாரங்களோடு முன்வைத்தார். அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட போது அதனை மேலும் வலியுறுத்த இங்கிலாந்து சென்றார். அரசியலில் தனக்கு சரி என்று பட்டதை அப்படியே வெளிப்படுத்தும் துணிவு அவரிடம் இயல்பாகவே இருந்தது. தற்போது தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருக்கும் கலைஞர் மு.கருணாநிதியின் மீது இந்திராகாந்தி அரசாங்கம் ஊழல் வழக்கொன்றை விசாரிக்க சர்க்காரியா கமிசன் என அழைக்கப்பட்ட கமிசனை நியமித்தது. அந்தக் கமிசனின் முன்பு கலைஞா மு.கருணாநிதி சார்பாக வாதாடச் சென்றவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம். அக்கமிசன் முன்பு அத்தனை இந்திய வழக்கறிஞர்களுக்கு முன்பாக சட்டநுணுக்கங்களை அள்ளி எறிந்து வாதாட அவருக்கு ஒருசில நாள்கள்தான கிடைத்தன. மறுதவணைக்கு செல்வதற்கு முன்பு இறைபதம் எய்தினார்.

அமரர் பொன்னம்பலத்தின் ஒரே ஒரு புதல்வனே அமரர் குமார் பொன்னம்பலம். தான் சென்றதன் பின்பு சிங்கத்தின் குகைக்குள் நின்றே கர்ச்சிக்கும் வலிமை வாய்ந்த ஒரு புதல்வனை தமிழருக்களித்தது துர் அதிர்ஸ்டங்களுக்குள்ளேயே வாழ்ந்து வந்த ஈழத்தமிழருக்கு ஒரு சிறு அதிர்ஸ்டமாகவே இருந்தது. 'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை எந்நோற்றான்கொல்' எனும் சொல் என்ற வள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழியை நிரூபிக்குமாப்போல் அமரர் குமாரின் வாழ்வு அமைந்தது. சர்வதேசங்களிலும் எமது அவலத்தை வெளிப்படுத்திபடும் துன்பங்களை அஞ்சாது எடுத்துக் கூறி உரிமைகளை நிலைநாட்டுவதற்காகச் செயற்பட்டு வந்த துணிவுமிக்க குரலும் அடங்கியமை அல்லது அடக்கப்பட்டமை எம்மினத்தின் துர் அதிர்ஸ்டமே. குடும்ப ரீதியாகவே தமிழர்களுக்கு அவர்கள் ஆற்றிய சேவைக்கு தமிழர் செய்யக்கூடியது அவற்றுக்கு நன்றியாக எமது நெஞ்சங்களில் இருந்து அவர்களின் நாமங்களை அழியாது காப்பதேயாகும். ★

# என்றும் அழியாத பன்முகப் பணிகள்மூலம் நினைவு கூரப்படும் அமரர் ஸ்ரீபாஸ்கரன்

1932 இல் பிறந்த சு.பாஸ்கரன் மறைந்து ஓராண்டு சென்றாலும் அவரது பன்முகப்பணிகள் இன்றும் அவரை நினைவுகூர வைக்கின்றன என்றால் புனைந்துரை அன்று. இவர் பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் வெறும் கல்வியில மட்டும் கவனம் செலுத்தாது விளையாட்டுத் துறை, சாரணர் இயக்கம் போன்றவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தவர். கல்கத்தா பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற காலத்தில் சுதந்திர இந்தியாவின் முன்னணித் தலைவர்களான பண்டிதர் நேரு, டாக்டர் இராஜேந்திரபிரசாத் போன்றோர்களுடன் கொண்டிருந்த தொடர்பால் அங்கு பயின்ற ஈழத்து மாணவர்களின் குறைகளைத் தீர்ப்பதில் வெற்றி கண்டவர். இத்தகைய பின்னணி பிற்காலத்தில் அரசியல், பொதுச்சேவை ஆகியவற்றில் இவர் ஈடுபட்டு உழைக்க நல்ல தளமாக அமைந்தது.

1956 இல் பல்கலைக்கழக பட்டதாரியாக நாடு திரும்பிய இவா ஆசிரியப்பணியை மேற்கொண்ட காலத்தில் அரசியலிலும் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார். 1961 இல் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கொழும்பு அரசின் நிர்வாக இயந்திரத்தை 3 மாதங்களாகச் செயலிழக்கச் செய்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில இவர் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. மக்கள் பணியில் இவர் கொண்டிருந்த ஈடுபாடே மயிலிட்டி கிராம சபைத தலைவர், வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர், மல்லாகம் அபிவி ருத்திச்சங்கத் தலைவர் போன்றன இவர்வகித்த பதவிகளாகும். இவரின் பல்வகைப் பணிகளுக்கு இவரோடு இணைந்து செயலாற்றியவர் 1961இல் இவர் திருமணம்செய்த பாலாம்பிகை என்றால மிகையாகாது. கணவன் மறைந்தபின்னரும் அவரின் பணிகளைத் தொடர்ந்து நடத்துவதில் அவருக்குள்ள ஈடுபாட்டின் விளைவே இன்று அவர் தலைமை வகித்து நடத்தும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையாகும்.

நிறைவாக பாஸ்கரன் அவர்கள் மிகவும் நல்லவர், சிறந்த பண்பாளர், மனிதாபிமானம் மிக்கவர், பிறரின் துன்பங்களைக் களைவதில் முன்நிற்பவர், கல்விமான், சிறந்த பேச்சாளர், எச்சந்தர்ப்பத்திலும் தமது கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைக்கும பாங்குடையவர், சுயநலத்திற்காக தமது கருத்துக்களை விலை பேசாதவர். இத்தகைய இவரின் சிறப்புகளுக்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்ததுதான் யாழப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக இவர் நியமனம் பெற்றதாகும். இறக்கும் வரை சிறப்பான முறையில் இப்பணியைச் செய்து முடித்த பெருமை இவருக்குண்டு.

**நீத்தார் நயப்புரை**

பேராசிரியர்
**சி.க.சிற்றம்பலம**
*தலைவர்/வரலாற்றுத்துறை*
*பேரவை உறுப்பினர்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*திருநெல்வேலி.*

## மணிமண்டபம்

# வாழைப்பழத் தோலாக....

அளவான உயரம், பாமன். அழகான உருவம்; எடுப்பான உடை- நீளக் காற்சட்டை, கோட, ரை, சப்பாத்து அணிந்திருந்தார் அந்தக் கனவான்.

வாயில் இருந்து 'சிகரட்' கூட மிகவும் நளினமான முறையிலே புகையை வெளியிட்டுக் கொண்டிருந்தது!

எனினும் பார்வையில் ஓர் அலட்சியம் - அகம்பாவம்!

பலர் தன்னைப் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள் என்ற பிரக்ஞையே இல்லாமல், அந்த வீதியில் நடந்துகொண்டிருந்த அவர், 'ஐயோ' என அலறியபடி திடீரென வீதியில் விழுந்து உருண்டார்!

வீதியிற் கிடந்த வாழைப்பழத் தோலைக் கவனியாமல் அதன்மேல தன் சப்பாத்துக் காலை வைத்ததன் விளைவு!

அலறலைக் கேட்டுப் பாய்ந்து சென்றார்கள் பலர்; பக்குவமாக அவரைத் தூக்கி நிறுத்தினார்கள்.

முகத்திலே தண்ணீர் தெளித்தார்கள் சிலர்; விசிறியால் வீசினார்கள்.

'எந்தக் காலில் நோவு... கையில் ஒன்றுமில்லையே... எங்காவது காயம் பட்டுவிட்டதா.... ஆஸ்பத்திரிக்குப் போவோமா.... காப்பி சாப்பிடுகின்றீர்களா?... கொஞ்சம் பாத்து நடந்திருக்கக் கூடாதா.....?'

அனுதாப வார்த்தைகள்! பரிவு கலந்த விசாரிப்புக்கள்! செல்லமான 'கண்டிப்புக்கள்'!

'நசுக்கப்பட்டவன் நான்... என் வேதனையை யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லையே... என் பாட்டில், சும்மா கிடந்த என்மேல் அவர்தான வலியவந்து தன் சப்பாத்துக் காலை வைத்தவர்... நசுக்கப்பட்ட என்னைக கவனிக்க யாருமில்லை... நசுக்கிய அவருக்கு எத்தனை அனுதாபங்கள்... ராஜோபசாரங்கள்... விரக்தியுடன் கூறியது வாழைப்பழத்தோல்! -

தமிழக எழுத்தாளர் அமரர் விந்தன் எழுதிய உருவக் கதை ஒன்றின் சாராம்சம் இது!

கடந்த சில வாரங்களாக - மாதங்களாக - வருடங்களாக இலங்கை சம்பந்தப்பட்ட அரசியல் உலகில் நடந்துகொண்டே வரும் சம்பவங்களைப் பற்றிச் சிந்திக்கும்போது, "விந்தன்" எழுதிய இந்த உருவகக் கதை தான் அடிக்கடி நினைவுக்கு வருகின்றது.

இலங்கைக் குடியுரிமைச் சட்டம், இந்திய-பாகிஸ்தானியர் சட்டம என்பவற்றால் இங்குள்ள தமிழ் பேசும் மக்களைப் பிரித்து ஒதுக்கத் தொடங்கிய பேரினவாதிகள், தனிச் சிங்களச் சட்டம், பிரிவினைத் தடைச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்றவற்றைப் பயன்படுத்தி இம் மக்களை மேலும் அடக்கி ஒடுக்கி நசுக்கிக்கொண்டே வருகின்றார்கள்.

தரப்படுத்தலால், தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பு நசுக்கப்பட்டது; நசுக்கப்படுகின்றது.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தமிழர்களின பாரம்பரிய வாழ்விடங்களை அவர்களிடமிருந்து பறித்தெடுகின்றன

சிங்கள மொழி தெரியாத காரணத்தால், தமிழர்களின் வேலை வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது; பதவி உயர்வு மறுக்கப்படுகின்றது

அரசு வெளியிடும் பாடப் புத்தகங்களில், தமிழ் மக்களைச் சிறுமைப்படுத்தி வேதனையடையச் செய்யும் தகவல்கள் இடம்பெறுகின்றன

நாம் விரும்பாத போர் - எம்மீது திணிக்கப்பட்ட போர் - வெல்ல முடியாத போர் - எனப் போரை வெறுப்பதாகக் காட்டிக்கொண்டும் -

அதேவேளையில், சமாதானத்திற்கான போர் - எனச் சப்பைக்கட்டு கட்டிக்கொண்டும் அரசு தீவிரப்படுத்தி வரும் போரினால் -

இலக்கை எட்டமுடியாமல் வழிதவறும் பயங்கர ஆயுதங்களினால் - வான் பரப்பிலிருந்து மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான குண்டு வீச்சினால் -

வகை தொகையின்றி - உடல்சிதறி - உருக்குலைந்து கொல்லப்படுபவர்கள் தமிழர்கள்!

சொந்த வீட்டை, சொந்த ஊரை விட்டுப் புலம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் அடர்ந்த காடுகளிலும் வெட்ட வெளிகளிலும் கிடந்து அல்லற்பட்டு ஆற்றாது அழுதபடியே வாழ்நாளைக் கழிக்கும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுபவர்கள் தமிழர்கள்!

பொருளாதாரத் தடையாலும் மருந்துத் தடையாலும் மெல்ல மெல்லக் கொல்லப்படுபவர்களும் தமிழர்களே!

திடீர் திடீர் எனக் காணாமற்போய், பிணங்களாகவும் எலும்புக் கூடுகளாகவும் மீட்கப்படுபவர்களும் தமிழர்களே!

சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு நீதி விசாரணையுமின்றி விடுதலையுமின்றி சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டுச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுபவர்களும் தமிழர்களே!

எனினும் -

நிறுத்தவும் விரும்பாமல், வெல்லவும் முடியாமல், தொடர்ந்து தீவிரப்படுத்திக்கொண்டிருக்கும் இந்தப் போரில் அரசுக்குப் பின்னடைவுகள் - இழப்புக்கள் - தோல்விகள் ஏற்படும் வேளைகளில் -

மக்களின் அடிப்படை உரிமைகள் காப்பாற்றப்படவேண்டும; பேரினவாதம் ஒழிக்கப்பட வேண்டும்; ஆயுதப் போர் நிறுத்தப்பட வேண்டும்; சகல மக்களுக்கும் சம உரிமையும் சம வாய்ப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்; சிறுபான்மை மக்களின் மொழி-மத-கலாசார உரிமைகள் பேணப்பட வேண்டும் -

என்றெல்லாம் வாய் கிழியக் கத்தும் உலக நாடுகள் பல, இலங்கை அரசுக்குத்தான் தம் ஆதரவுக் கரத்தை நீட்டுகின்றன; அனுதாப வார்த்தைகளைச் சொரிகின்றன; ஆயுத உதவியையும் போர் நுணுக்க ஆலோசனைகளையும் வழங்குகின்றன!

நசுக்கப்படும் தமிழினத்தை நினைத்துப் பார்ப்பதேயில்லை!

உடனடியாக இல்லாவிட்டாலும், சிறிது சிறிதாக ஆவது வெளிநாடுகளின் இத்தகைய தவறான மனப்பான்மையை மாற்றித் தமிழர்களின் பால் அவர்களின் கவனத்தைத் திருப்பவேண்டுமெனில் -

அரசு கட்டவிழ்த்துவிடும் பயங்கரவாதம் பற்றி - அதிகாரத்தில் இருப்பவர்களின் அத்துமீறல்கள் பற்றி - செய்தித் தணிக்கை செய்யும் இருட்டடிப்புக்கள் பற்றி அப்பாவித் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள், துயரங்கள், சோகங்கள் பற்றி -

ஒவ்வொரு நாட்டுக்கும் - நாட்டின் ஆட்சி பீடத்தினருக்கும் ஆதாரபூர்வமாக - உடனுக்குடன் அறிவிக்கப்படவேண்டும்

தமிழ் மக்களின் நலன்களையும் உரிமையையும் காப்போம் என்ற வாக்குறுதி காரணமாக தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் -

கட்சி நலனையும், சொந்தச் செல்வாக்கையும் பெரிதாகக் கருதாமல், அரசுப் பிரமுகர்களின் முகத்தை முறிப்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் -

இந்தப் பெரும் கடமையை நிறைவேற்றுவதில் உடனடியாகவே ஈடுபடாவிட்டால் -

ஈழத் தமிழினம் வாழைப்பழத் தோலாக நசுக்கப்பட்டுக்கொண்டே இருக்கவேண்டியதுதான்!

**சித்தன்**

## பரிசளிப்பு விழா

வலிகாமம்தெற்கு,நவ.12

ஏழாலை மகா வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சு.தம்பித்துரை தலைமையில் நடைபெறும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கல்விக்கோட்ட அதிகாரி அ.தற்பரானந்தன், அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் அ.நல்லதம்பி ஆகியோர் கலந்து கொள்வர்.

முன்னாள் கொத்தணி அதிபரும் இராமநாதன் கல்லூரி அதிபருமான திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் வாழ்த்துரை வழங்குவார்.

(ஐ-152)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

**NP GB 3494** இலக்கமுடைய புதிய ஓட்டோ, 202 தொடர் இலக்கமுடைய மற்றுமொரு ஓட்டோ,4 **SRI** தொடர் இலக்கமுடைய **VOLKS WAGON** கார் என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு: 23, உடுவில் வீதி, மானிப்பாய். (80324)

குளிர்சாதனப்பெட்டி **(Kenwood)**, கட்டில், மேசை, கதிரை, சிலிண்டர், காஸ்குக்கர், **T.V Stand, Dinner Set** ஆகியன விற்பனைக்குண்டு. (காலை 8.30முதல் 4.30 மணி வரை) தொடர்புக்கு: 958/25, தலையாளி லேன், யாழ்ப்பாணம். (80395)

நல்ல நிலையிலுள்ள பாவித்த அலுமாரி, கட்டில், சாப்பாட்டு மேசை, கதிரைகள், வேறு தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:118/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (80340)

மேசை, கண்ணாடி அலுமாரி, 3 பேஸ் மோட்டர் **3HP, 3 6/7 HP.** பார்வையிடும் நேரம் **2p.m.-6p.m.** தொடர்புகளுக்கு: 44/3, மணற்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (80407)

வீடியோ **C.D.**(பழைய படங்கள், ஒரிஜினல் பிரமிட **C.D**) ஓடியோ **C.D**கள் விற்பனைக்குண்டு.தொடர்பு: 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (80439)

**Broilers, Cullbirds** இறைச்சிக் கோழிகள், சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80380)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி, கல்பேட் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்புக்கு: 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (80292)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில, கடித மூலமும் பயிற்சி பெறலாம். ஆசிரியர்: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. 426(302), காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். (80397)

## வீடு விற்பனைக்கு

நாகேந்திரமடம், அராலி வடக்கு எனும் முகவரியில் வீடு ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: தம்பித்துரை தவநாயகி **(Post Master)**, நாகேந்திரமடம், அராலிவடக்கு, வட்டுக்கோட்டை. (80364)

மல்லாகம் நீதிமன்ற வீதியில் கடையும், கல்வீடும் உடன் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு: திருமதி பரமேஸ்வரி சிவபாதம், நீதிமன்ற வீதி, மல்லாகம். (80425)

## தொடர்பு கொள்ளவும்

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வீட்டுடன் காணி விற்கவும், வாங்கவும் விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். சிங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள சலவைத் தொழிற்சாலையில் (லோண்ட்றியில்) விசாரிக்கவும். (80416)

கைதடி, கோகிலாக்கண்டியைச் சேர்ந்த சின்னையா ரட்ணம் என்பவர் உடன் தொடர்பு கொள்ளவும். தபால் மூலமோ அல்லது நேரிலோ தயவு செய்து சந்திக்கவும். தொடர்பு: தி. திருக்குமரன் (வீணாவேணு) வழக்கம்பரை வீதி, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (80448)

## SALES

புதிய ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் **1. PHOENIX SIGMA III (Japan) 2. OLIVETTI LETTERA - 32 (SPAIN) 3. HERMES BABY (SWITZER LAND)** விற்பனைக்குண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (80439)

## சனி மாற்றம்

14.10.2000 - 11.04.2001 வரை சனிவக்கிர மாற்ற பலன்கள் 05.10.2000 - 01.02.2001 வரை வியாழவக்கிர பலன்கள் எங்கும் விற்பனையாகின்றன. ரூ10/- கணிப்பாசிரியர்: சத்யா, 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (80426)

## மலிவு விலையில் விற்பனைக்கு

T.V.S. மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. பெற்றோல் பாவனையில் உள்ளது. விலை 12,500/- தொடர்புகளுக்கு: T.சங்கர், 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 2486. (c/13788)

## உடன் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள பெற்றோலில் மட்டும், பாவித்த புதிய சாளி மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. **(LATEST MODEL CHALY)** தொடர்பு: நீ. அல்பேட் சில்லாலை,பண்டத்தரிப்பு. (80449)

5ஸ்ரீ 4530 இலக்கம் கொண்ட ஒஸ்ரின் மொறிஸ் (வெள்ளை) கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.7, பேரின்பநாயகம் வீதி, கச்சேரி. (80450)

புதிய **(CHINA)** வயலின். கோழிக்குஞ்சு பொரிக்கும் சாதனம், **England** வில்லியஸ் 12 வாட்டர்பம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.திருக்குமரன் (வீணாவேணு), வழக்கம்பரை வீதி, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (80447)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969 ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றம் உள்ள 5'3" உயரமான நற்குணம் மிக்க அழகிய அரச தொழில் பார்க்கும் பட்டதாரி மணமகளுக்கு உள்நாட்டில் தொழில் புரியும் தகுதியுடைய மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சகல விவரங்களுடன் தொடர்புகளுக்கு: விளம்பர இல.1121, மே/பா உதயன். (79713)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நற்குணமுள்ள மணமகனுக்கு சைவ போசன குடும்பத்தைச் சேர்ந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1137,மே/பா உதயன். (80455)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சைவ போசனமுடைய 30 வயதுடைய அரச நிறுவனத்தில் தொழில்புரியும் மணமகனுக்கு சைவ போசனமுடைய மணமகள் தேவை. அவிட்டம், 3,4,7ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வீடும் ஓரளவு ரொக்கமும் எதிர் பார்க்கப்படும்.தொடர்பு: **K.S.** சர்மா ஆசிரியர், வேம்படி முருகன் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (80443)

## ஆங்கில வகுப்புகள்

அச்சுவேலியில் ஆங்கில வகுப்புகள். ஒரு வகுப்பில் 10-15 மாணவர்கள் மட்டும். தனிப்பட்ட கவனம் எடுக்கப்பட்டு முன்னேற்றம் அவதானிக்கப்படும். வகுப்புகள் 01.01.2001 இல் ஆரம்பமாகும். விவரங்களுக்கு 10.11.2000ஆம் திகதிய உதயனின் 4ஆம் பக்கத்தைப் பார்க்கவும். (80432)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கைதடி,நாவற்குழி,கைதடி எனும் விலாசமிடப்பட்ட கணபதி பேரம்பலம் என்பவருடைய தே.அ. அட்டை (இல. 501802883v) வி.அ. அட்டை (இல.091018787) என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரியவர்கள்: இ.சந்திரகுமார், C/o சி. இராசம்மா, துன்னாலை மேற்கு, கரவெட்டி என்னும் விலாசத்தில் வந்து பெற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன். (80427)

## இருவருக்கு விளக்கமறியல்

கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் ஓடுகளைத் திருடியதாக பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட மூவரில் ஒருவரை பிணையில் செல்ல அனுமதித்த யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா ஏனைய இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மரியதாஸ் யேசுதாசன், டிலக்கியஸ் எரிக்சந்திரகுமார், பொன்னுத்துரை ஜேம் அரியநாதன் ஆகிய மூன்று சந்தேகபர்களுமே இத்திருட்டு சம்பந்தமாக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்கள்.

இவர்களில் மூன்றாவது சந்தேக நபரை 10 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் முதலாவது 2ஆவது சந்தேக நபர்களை எதிர்வரும் 21ஆம திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-5-6)

## நாவலர் குருபூசை விழா

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை எதிர்வரும் 19ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் மேற்படி குருபூசையை முன்னிட்டு துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் பண்ணிசை மற்றும் நாவலர் பெருமான் பற்றிய பேச்சும் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெறும். நண்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ஐ-111)

## பழைய நிறையில் பாண் விற்பனை

வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்தும் 350 கிறாம் பாண் 7 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

450 கிறாம் பாண் 10 ரூபா உச்ச விலையாக விற்பனை செய்யப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டு நீண்ட நாள்களாகியும் வடமராட்சியின் பல பகுதிகளிலும் பழைய நிறை, விலைகளுக்கே பாண் விற்கப்படுகிறது. (173)

## பரிசளிப்பு விழா

உடுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். இ.வை.கனகநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் சி.லோகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்

## ஆண்டிறுதிப் பயிற்சிப் பரீட்சை

*தரம் 3 முதல் தரம் 10 வரை*
*சகல பாடங்களுக்கான பயிற்சிப் பரீட்சை...*
*ஆரம்பம் இம்மாதம் 18,19 ஆம் திகதிகளில்*

* வெளி மாணவர்களும் பரீட்சை எடுக்க முடியும்.
* வினாத்தாள்கள் பெற விரும்பும் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள் 18-11-2000 க்கு முன் தொடர்பு கொள்ளவும்.
* வினாத்தாள்கள் 20-11-2000 க்கு பின் விற்பனைக்கு விடப்படும்.

**நாவலர்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (80445)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

தோற்றம்
20
-
10
-
1954



மறைவு
30
-
09
-
2000

**அமரர்**
**சுந்தரம் யோகானந்தா**
(பிரதி அதிபர், யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி,
சபா போட்டோ உரிமையாளர்)

**மாதம் ஒன்று சென்றாலும் உங்கள்**
**அன்பு முகம் மறையவில்லை - அப்பா**
**பாசத்தோடு எமைத் தாங்கி**
**நெஞ்சினில் சுமந்த அப்பாவே!**
**ஆறாத்துயரில் எம்மை விட்டு ஆண்டவன்**
**அடியில் சேர்ந்தீர்களோ அப்பா!**

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

நாளை (13-11.2000) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*
(80442)

## அறைகள் வாடகைக்கு!

*வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட*
*அறைகள் வாடகைக்கு உண்டு.*

**கென்வூட் லொட்ஜ் (இன்)**

71. ஸ்ரேஸ் றோட், கிரான்பாஸ்,
கொழும்பு - 14.
*தொலைபேசி - 330127*
(80437)

# நினைவலைகள்

இருபத்து மூன்றாவது ஆண்டு

தோற்றம்
1927
-
08
-
20



மறைவு
1977
-
10
-
21

விடாமுயற்சிக்கோர் வெற்றித் தந்தை
**அமரர் வினாசி பரமநாதன்**
அவர்கள்

சிந்தை அணுக்களில் தேன் பாய்ச்சிய தந்தை
சீரிய வாழ்விற்கு பாதை காட்டிய தந்தை
செந்தமிழ் மொழி பேச வைத்த தந்தை
தேசமெங்கும் வாழ வைத்த தந்தை

*இல.215, மூத்த விநாயகர் வீதி,*
*நல்லூர் கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

முப்பத்தொராவது நாள்

தோற்றம்
1931
-
-
30



மறைவு
2000
-
10
-
13

வந்தனைக்குரியவள் எங்கள் தாய்
**திருமதி யோகம்மா பரமநாதன்**
(பத்மாவதி)

வந்தனைக்குரியவள் எங்கள் தாய்
வானவரும் போற்றும் எங்கள் தாய்
சந்ததி பல தோன்றச் செய்த தாய்
சரித்திரம் மறக்காது வாழ்த்தும் தாய்

**மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(80433)

## யாழ்ப்பாணம், மாநகரசபை

# கேள்வி அறிவித்தல்-2001

இதன் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளதும், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட சந்தைகள், இறைச்சிக் கடைகள் மற்றும் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் ஆகியவற்றை 01—01 2001 முதல் 31—12—2001 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளராகிய என்னால் 05—12—2000 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12. 30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணைப் பணமும், கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 250 செலுத்துவதன் பேரில் 04—12—2000 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிவரையும் யாழ்ப்பாண மாநகர சபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை யாழ்ப்பாண மாநகர சபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 05—12—2000 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல 12.30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''............'' கேள்விக்கான விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும் போது ஏற்படும் தாமதங்களுக்கு யாழ்ப்பாண மாநகர சபை பொறுப்பேற்கமாட்டாது.

கேள்விகள் 05—12—2000 ஆம் திகதி பிற்பகல் 2. 30 மணிக்குத் திறந்து பரிசிலிக்கப்படும். அத் தருணம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்க முடியும். மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

### அட்டவணை

| 01) | சந்தைகள் (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு உட்பட) | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1. | பெரியகடை மரக்கறிச் சந்தை | 5 000/- | 3,00 000/- |
| 2. | கொட்டடி மீன் சந்தை | 5,000/- | 8,82,000/- |
| 3. | குருநகர் சந்தை | 5,000/- | 4,70,000/- |
| 4. | செங்குந்தா சந்தை | 5,000/- | 3,30,000/- |
| 5. | நாவாந்துறைச் சந்தை | 2,500/- | 50, 000/- |

| 2) | துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 | யாழ். வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் (தற்போது வைத்தியசாலையில் இயங்கும் து. ச. வ. பாதுகாப்பு நிலையமும் தொடர்ந்து இயங்கும்) | 2500/- | 2,00,000/- |
| 2. | கஸ்தூரியார் வீதியிலுள்ள துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் (சைக்கிளுக்கு ரூபா 1.00 – வும் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 2. 00 – வும் மட்டும் அறவிடப்படல் வேண்டும்) | 2500/- | 18, 000/- |

| 3) | இறைச்சிக் கடைகள் | கடை இல. | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வி | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 1. | கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை | 01 | 2,500/- | 22,000/- | 123 75 |
| 2. | ,, ,, | 02 | 2,500/- | 20,400/- | 112.50 |
| 3. | ,, ,, | 03 | 2,500/- | 21,100/- | 112.50 |
| 4. | ,, ,, | 04 | 2,500/- | 21,000/- | 112.50 |
| 5. | ,, ,, | 05 | 2,500/- | 20,100/- | 112.50 |
| 6. | ,, ,, | 06 | 2,500/- | 19,500/- | 112.50 |
| 7. | ,, ,, | 07 | 2,500/- | 19,500/- | 112.50 |
| 8. | ,, ,, | 08 | 2,500/- | 18,700/- | 112.50 |
| 9. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | 01 | 2,500/- | 76,000/- | 195.00 |
| 10. | ,, ,, | 02 | 2,500/- | 61,000/- | 195.00 |
| 11. | ,, ,, | 03 | 2,500/- | 66,000/- | 195.00 |
| 12. | ,, ,, | 04 | 2,500/- | 41,000/- | 195.00 |
| 13. | ,, ,, | 05 | 2,500/- | 46,000/- | 195 00 |
| 14. | ,, ,, | 06 | 2,500/- | 44,000/- | 195.00 |
| 15. | ,, ஆட்டிறைச்சிக் கடை | 07 | 2,500/- | 8,000/- | 195.00 |
| 16. | நரிக்குன்று மாட்டிறைச்சிக் கடை | 01 | 2,500/- | 68,000/- | 135·00 |
| 17. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | 01 | 2,500/- | 32,500/- | 112.50 |
| 18. | ,, ,, | 02 | 2,500/- | 25,300/- | 112.50 |
| 19. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 01 | 2,500/- | 13,500/- | 200.00 |
| 20. | ,, ,, | 02 | 2,500/- | 9,000/- | 200.00 |
| 21. | ,, ,, | 03 | 2,500/- | 13,500/- | 200.00 |
| 22. | ,, ,, | 04 | 2,500/- | 5,200/- | 200.00 |
| 23. | ,, ,, | 05 | 2,500/- | 7,300/- | 200.00 |
| 24. | ,, ,, | 06 | 2,500/- | 5,300/- | 200.00 |
| 25. | ,, ,, | 07 | 2,500/- | 9,700/- | 200.00 |
| 26. | ,, ஆட்டிறைச்சிக் கடை | 08 | 2,500/- | 3,700/- | 200.00 |

**முக்கிய குறிப்பு:**

தற்போது குத்தகை/வாடகை நிலுவைப் பணம் செலுத்த வேண்டியவர்களும், ஏற்கனவே தவறுநர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களும் கேள்விப்படிவம் பெற அருகதையற்றவர்களாவர்.

இராஜா தணிகாசலம்
பதில் மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.,
2000—11—10

(ஜ/13791)

## கல்வியங்காடு பகுதியில் மற்றொரு வீட்டில் திருட்டு

வலி கிழக்கு, நவ. 12

கல்வியங்காடு பகுதியில் மற்றொரு வீட்டிலும் இரவு வேளை துணிகரத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

திருநெல்வேலி கிழக்கு செங்குந்த வீதியில் உள்ள ஓய்வுபெற்ற அதிபர் ஒருவரின் வீட்டுக்குள் வெள்ளி இரவு புகுந்த திருடர்கள் அங்கிருந்து வீடியோ படப்பிடிப்பாளர் ஒருவரின் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடியோ டெக் மற்றும் றேடியோ என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டில் வெளிப்புறக் கேற்றைக் கழற்றியே திருடர்கள் உள்நுழைந்துள்ளனர். கழற்றப்பட்ட கேற் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

கல்வியங்காடு, கட்டப்பிராய்ப் பகுதியிலும் கடந்த 4 ஆம் திகதி இரவுவேளை வீடு ஒன்றில் பொருள்கள் சூறையாடப்பட்டது தெரிந்ததே. (ஐ-180)


## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டியில் உள்ள சகல ஆலயங்களிலும் நாதஸ்வர கான இசை மழை பொழிந்த

### திரு. கணேசபிள்ளை பாலச்சந்திரன்

இலங்கை, இந்தியா, மலேசியா எங்கும் புகழ்பெற்ற தெட்சணாமூர்த்தியின் மருமகனான இவரின் மறைவு அதிர்ச்சியையும் வேதனையையும் தந்துள்ளது. அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய அழகொல்லை விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

அழகொல்லை பிள்ளையார் கோயில்
சு. இரத்தினக் குருக்கள்,
இ. மகாலிங்கக் குருக்கள்,
அழகொல்லை அடியார்கள்.

அளவெட்டி.

(80441)



## மரண அறிவித்தல்கள்

### JOSEPH KUMARADAS

(Retd. Supt. Engineer / Buildings)

யாழ்ப்பாணம் வதிரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவரான J. C. குமாரதாஸ் (75 வயது) அவர்கள் 09—11—2000 அன்று கனடாவில் மாரடைப்பால் காலமானார்.

இவர் வதிரி காலஞ்சென்ற யோசேப் அலிஸ் (ஆசிரியர்) அவர்களின் அன்புப் புதல்வனும், டிலேன், நிட்றா, ஜோசபின், சாலின், டானியா, காள், நடீன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மத்தியூ, நிக்கோல், ஒலிவியா, மேகன், றொபின், கிறிஸ்ரீனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற யேசுதாசன், தேவமலர், காலஞ்சென்ற பரமதாஸ், சத்தியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (13—11—2000) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

தகவல்:
J. சத்தியதாஸ்

29A, Beach Road,
Mount Lavinia.
Tel. 723613.

(சி/ 13798)

### கந்தர் முருகேசு

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த கந்தர் முருகேசு அவர்கள் நேற்று முன்தினம் (10 – 11 – 2000) வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாக்கியம் சரஸ்வதி, தேவகுஞ்சரம், பரமசாமி (முன்னாள் வாழைச்சேனை கடதாசி ஆலை உத்தியோகத்தர்), வன்னியசிங்கம் (கனடா), யோகேஸ்வரி, தர்மலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வீரசிங்கம், கந்தையா ஓய்வுபெற்ற (சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஊழியர்), நவரத்தினம் திருமதி கனகாம்பிகை பரமசாமி (ஆசிரியை சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்), திருமதி விலோச்சனா வன்னியசிங்கம் (கனடா), இராசரத்தினம் (மருந்தாளர் அரசினர் வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு), திருமதி வசந்தா தர்மலிங்கம் (கனடா), ஆகியோரின் அன்பு மாமனும், பேபி, ராணி, [illegible], தவராசா, லலிதா, பவானி, ஜெயான், நவி, [illegible], கீதா, சர்வன், ராசன், [illegible], வசந்தி, [illegible], ஜெயந்தி, விமலன், விநோதன், நர்மதா, பிரசாந், நிறோஷன், வினோஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்றைய தினம் (11 - 11 2000) சனிக்கிழமை புதுக்குடியிருப்பில் தகனம் செய்யப்பட்டது.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
பர. மசாமி
(மகன்)

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

(80446)

## பலஸ்தீனத் தளபதி இறந்ததையடுத்து

# மேற்குக்கரை மற்றும் காஸாவில் மீண்டும் வன்முறைகள் வெடித்தன

## இதுவரை 198 பேர் பலி

காஸா, நவ. 12

பலஸ்தீனத் தீவிரவாத இயக்கத் தளபதி இஸ்ரேலியப் படைகளால் கொல்லப்பட்டதை அடுத்து, மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதிகளில் மீண்டும் மூண்ட வன்முறைகளில் 5 பலஸ்தீன இளைஞர்கள் கொல்லப்பட்டதுடன், இஸ்ரேலிய வீரர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் பலஸ்தீன நிலைகள் மீது நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களில் 'சுற்றாவ்' இயக்கத்தைச் சேர்ந்த தளபதி ஹுசேய்ன் அபியாத் கொல்லப்பட்டார். அவரது இறுதிச் சடங்குகளில் முகமூடி அணிந்த இளைஞர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் கலந்து கொண்டனர்.

இறுதிச் சடங்கின் முடிவில் அவர்கள் இஸ்ரேலியப் படையினர் மீது கல் வீசித் தாக்கினர். இதைத் தொடர்ந்து மோதல்கள் வெடித்துப் பரவின.

இதற்கிடையில் கடந்த வியாழக்கிழமை அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனைச் சந்தித்து மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து ஆலோசனை நடத்திய பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் பலஸ்தீன மக்கள் வாழும் பகுதிகளில் பன்னாட்டுப் படைகளை நிறுத்தும் தமது கோரிக்கையை வலியுறுத்தியுள்ளதுடன், ஓயாத வன்முறைகளுக்கு இஸ்ரேலே காரணம் என்று தெரிவித்துள்ளார்.

இன்று அமெரிக்க அதிபருடன் இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக் ஆலோசனை நடத்த உள்ளார். அவர் அமெரிக்காவுக்குப் புறப்பட முன்னர் மேற்குக் கரை மோதல்களை முடிவுக்குக் கொண்டுவராமல் மேற்காசியப் பிரச்சினை தொடர்பாக எந்த விதப் பேச்சுக்களையும் ஆரம்பிக்க இஸ்ரேல் தயாரில்லை என்று கூறியுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் 28 ஆம் திகதி ஆரம்பித்த இஸ்ரேலியப் படைக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையேயான மோதல்களில் இதுவரை 198 பேர் இறந்துள்ளனர்.

(ஒ — 8)

# பாரிய மனிதப் புதைகுழி கமரூனில் கண்டுபிடிப்பு!

யவுண்டி, நவ. 12

மேற்கு ஆபிரிக்க நாடான கமரூனில், ஜனாதிபதி போல் பியா ஆட்சியைக் கைப்பேற்ற 18 ஆண்டுகள் நிறைவு விழா கொண்டாடப்படும் தருணத்தில் மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கமரூன் சர்வதேச விமான நிலையத்தின் அருகே மேற்கொள்ளப்பட்ட கட்டடப் பணிகளின்போது தற்செயலாகக் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் 36 சடலங்கள் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில், உருக்குலைந்து காணப்பட்டதாகவும்—

கடந்த ஜூன் மாதம் நாட்டில் நிகழ்ந்த இனப்படுகொலைகளின் போது கொல்லப்பட்டவர்களின் சடலங்களாக இவை இருக்கலாம் என்று நம்பப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் புதைகுழி குறித்து அரசு இதுவரை கருத்து எதுவும் கூறவில்லை, இனப்படுகொலைகள் குறித்து விசாரணை நடத்தி வரும் அமைப்புக்குப் புதைகுழி பற்றி தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

கமரூனில் இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் இரு ஆபிரிக்க இனங்களிடையே ஏற்பட்ட மோதல் அரசு மற்றும் எதிர்க்கட்சி சார்ந்த இனப்படு கொலைகளாக மாறியது. இதில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

உலக அரங்கில்

எதிர்க்கட்சியான சமூக ஜனநாயகக் கட்சியின் ஆதிக்கம் நிறைந்த வடமேற்கு, தென்மேற்குப் பகுதிகளில் படுகொலைகள் அதிகம் இடம் பெற்றதாகக் கூறப்படுவதாலும்—

பலரைக் காணவில்லை என முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருவதாலும்—

கமரூனில் பரவலாக மேலும் பல மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. (ஒ—8)

# கறுப்பரை நாய்கள் கடித்துகுதற ரசித்த வெள்ளையர் கைது!

## தென்னாபிரிக்காவில் பரபரப்பு

ஜொகன்ஸ்பேர்க், நவ. 12

தென்னாபிரிக்காவில் கறுப்பு இனத்தவர்களை நாய்களை விட்டுக் கதறக்கதறக் கடித்துக் குதற வைத்த வெள்ளையர் இன பொலீஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொஸாம்பிக்கிலிருந்து சட்ட விரோதமாகத் தென் ஆபிரிக்காவில் குடியேறி தங்கச்சுரங்கத்தில் வேலை செய்த 3 கறுப்பர்களைப் பிடித்த 6 வெள்ளை இனப் பொலீஸ் அதிகாரிகள். அவர்களை ஒரு வயல் வெளிக்குள் விரட்டி, 4 பொலீஸ் நாய்களை விட்டுக் கடித்துக் குதற வைத்தனர்.

கறுப்பர்கள் கெஞ்சி மன்றாடிய போதும் சுமார் ஒரு மணி நேரம் நாய்களின் வெறியாட்டத்தை உற்சாகப்படுத்திக் கைதட்டி ரசித்து வெள்ளை அதிகாரிகள் மகிழ்ந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் 1998 ஆம் ஆண்டு இடம்பெற்ற போதிலும், அந்தச் சமயத்தில் இரகசியமாகப் படம் பிடிக்கப்பட்ட ஒளிநாடாவைக் கடந்த வாரம் அரசுத் தொலைக்காட்சி நிறுவனம் ஒளிபரப்பியதை அடுத்தே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் வெள்ளையரின் இன ஒதுக்கல் ஆட்சி முடிவுக்கு வந்து 6 ஆண்டுகள் ஆன பின்பும் பொருளாதாரத்திலும் பொலீஸ், ராணுவ உயர் பதவிகளிலும் வெள்ளையர்கள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருவதாக கறுப்பினமக்கள் குற்றஞ்சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

# நீர் மூழ்கியிலிருந்து சடலங்களை மீட்கும் பணி நிறுத்தப்பட்டது

மொஸ்கோ, நவ. 12

'பாரன்ஸ்' கடலின் அடியில் சிக்கியுள்ள ரஷ்ய 'கேர்ஸ்க்' நீர்மூழ்கிக்கப்பலில் உள்ள சடலங்களை மீட்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளதாக ரஷ்ய அரசு அறிவித்துள்ளது.

நீர்மூழ்கியின் உட்புறம் மோசமாகச் சிதைவுற்றிருப்பதால், அப்பகுதியில் சிக்கியுள்ள சடலங்களை மீட்பது சுழியோடிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்ற அச்சத்தினாலேயே கடந்த 18 நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த சடலங்களை மீட்கும் பணிகள் நிறுத்தப்பட்டதாகவும்—

அடுத்த ஆண்டு நீர்மூழ்கியைக் கரைக்குக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளதாகவும்— அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை 12 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நீர்மூழ்கியைக் கரைக்குக் கொண்டு வர முன்னர், அதிலுள்ள சடலங்கள் மீட்கப்படும் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இறந்தவர்களின் உறவினர்களுக்கு உறுதியளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 'கேர்ஸ்க்' நீர்மூழ்கி விபத்தில் சிக்கி கடலில் ஆழ்ந்ததில் அதிலிருந்த 118 பணியாளர்கள் உயிரிழந்தது தெரிந்ததே. (ஒ-8)

ENGLISH
Spoken and Grammar
By: BRITTO
புதிய பிரிவு
செவ்வாய், வியாழன்
பி. ப. 3.00 (ப.நே.)
ஆரம்பம்:
13-11-2000
திங்கட் கிழமை
பி. ப. 2.30 (ப.நே.)
இடம்: கொக்குவில்
(ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)
(சி/13779)

# பேச்சுக்கு வரும் பிரபாகரனை பிடித்து நாடு கடத்த வேண்டும்

## இப்படிக் கூறுகிறார் சுப்பிரமணியசுவாமி

சென்னை, நவ. 12

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வந்தால் அவரைக் கைது செய்து நாடுகடத்தும் சட்டரீதியான கடமை இலங்கை ஜனாதிபதிக்கு உள்ளது என்று சென்னையில் செய்தியாளர்களிடம் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியுடன் நேரடிப் பேச்சுக்கு பிரபாகரன் அழைக்கப்படலாம் என்று செய்தி வெளியாகியுள்ளது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறிய சுவாமி, பிரபாகரனை நாடு கடத்துவது தொடர்பான இன்ரர் போல் அறிவித்தலையும் குறிப்பிட்டார்.

புதுடில்லி மாநில அரசு டில்லியில் பெரியார் நிலையம் அமைக்க இருப்பதை முடக்கி வைக்குமாறு டில்லி முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும்

பெரியார் நிலையம் கட்டப்பட்டால், அதனை விடுதலைப் புலிகள் டில்லியில் தமக்குப் பாதுகாப்பான இல்லமாக்கிக் கொள்வார்கள் என்றும் சுப்பிரமணியசுவாமி மேலும் தெரிவித்தார். (ஜ—8)

# கிளின்ரன் அடுத்த வாரம் வியட்நாமுக்கு விஜயம்

வியட்கொங், நவ. 12

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அடுத்த வாரம் வியட்நாமுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1960 களின் நடுப்பகுதியில் அமெரிக்கா வியட்நாமை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து அங்கு ஆட்சியில் இருந்து வந்த கமியூனிஸ்ட் அரசுகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் எவையும் நீண்டகாலமாக இருக்கவில்லை. மிக அண்மைக் காலத்தில் இருந்தே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மீண்டும் சீரடைய ஆரம்பித்தன.

சுமார் 50 ஆண்டுகளின் பின்னர் வியட்நாமுக்கு விஜயம் செய்ய உள்ள முதலாவது அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனே ஆவார். அதேநேரம், விரைவில் தனது பதவிக் காலம் முடிவடைந்து பதவியில் இருந்து விலகிச் செல்ல உள்ள கிளின்ரன் மேற்கொள்ளும் இறுதி உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயமாகவும் இதுவே இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்று தற்போது வியட்நாமில் தங்கி உள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் அமெரிக்க ஜனாதிபதியின் விஜயம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், கடந்தகால வரலாறுகளை மறந்து நாம் நாளைய உலகை நோக்கிச் செல்கின்றோம் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது என்றார். (ஜ 8)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சந்திரரதி கணேசன் (ரதி)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திரரதி கணேசன் (09-11-2000) வியாழன் காலமானார்.

அன்னார் வைத்தியகலாநிதி மு. கணேசன் அவர்களின் அன்பு மனைவியும், மல்லாகம் அமரர்களான சதாசிவம், பரமேஸ்வரி அவர்களின் அருமை மகளும், தெல்லிப்பழை கணேச விலாஸைச் சேர்ந்த அமரர்களான திரு. திருமதி. முருகேசம்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், அர்ஜுன், திலீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஹரிச்சந்திரன், சந்திரகலா, செல்வச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் "கொனற்றிகற்றில்" 13-11-2000 திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

திருமதி ந ஞானலிங்கம்

59, பகிந்தா பிளேஸ்,
கிருலப்பனை.
T. P- NO 074—512139 (80464)

## திருமதி கபிரியேல் ஜெபநேசம்

திருமதி கபிரியேல் ஜெபநேசம் 10 - 11 - 2000 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் கபிரியேலின் அன்பு மனைவியும், செல்வமணி, ஜெயநாதன் (சுவிஸ்), சுகிர்தநாதன் (ஜேர்மனி), கிருபாநிதி, செல்வநிதி, காலஞ்சென்றவர்களான செல்வநாதன், சோதிநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் ஜெயராஜா, யோசப் பேர்ஷி, தேவி, காலஞ்சென்ற கருணாதேவி மற்றும் மெற்றாஜின், அமேலியா ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நல்லடக்க ஆராதனை இன்று (12 - 11 - 2000) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் (புதிய நேரம்) பரி. யாக்கோபு சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ஜெயராஜா

இல. 5, ஆடியபாதம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (80462)

# நடமாடும் சேவைகள் மூலம் அஞ்சல் அ. அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 12

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி நடமாடும் சேவைகள்மூலம் அஞ்சல் அறிமுக அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

அஞ்சல் அதிபர் நாயகத்தின் விசேட பணிப்பின் பேரில் மேற்படி சேவை நடத்தப்படவுள்ளதாகப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ச. சுந்தரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுவரை அஞ்சல் அறிமுக அட்டைக்கு விண்ணப்பிக்காத சகல மாணவர்களது எண்ணிக்கையையும் தத்தமது பாடசாலைகளின் பெயரையும் உடனடியாக அனுப்பிவைக்குமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சகல கல்வி வலயங்களும் அஞ்சல் அறிமுக அட்டை பெறுவதற்குரிய தமது மாணவர்களின் எண்ணிக்கையைத் தெரிவித்தால் அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை வழங்க முடியும் என்றும்—

அத்துடன் அந்தந்தப் பகுதியில் உள்ள அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்கள்மூலம் விண்ணப்பப் படிவங்களை விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் —

அஞ்சல் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

சகல பாடசாலை மாணவர்களது எண்ணிக்கை குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கும் பட்சத்தில் குடாநாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் குறிப்பிட்ட இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அங்கு நடமாடும் சேவை மூலம் அன்றைய தினமே அஞ்சல் அறிமுக அட்டைகள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அஞ்சல் அறிமுக அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவுள்ள மாணவர்கள் குறிப்பிட்ட தினத்தில் முத்திரைக்குரிய 40 ரூபா பணத்துடன் வரவேண்டும் என்றும் இது பற்றிய அறிவுறுத்தல்கள் யாவும் அந்தந்தக்கல்விவலயங்களூடாகச் சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நடமாடும் சேவை நடைபெறவுள்ள இடங்கள் மற்றும் தினங்கள் பற்றிய விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-10–6·15)

## இலவச கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம், நவ. 12

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் 10 நாள்கள் தொடர்ச்சியான இலவச கணனிப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

பயிற்சியின் இறுதியில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் இ. நல்லதம்பி, செயலாளர் எஸ். பஞ்சலிங்கம், சிறுவர் பாதுகாபபு நிதியப் பணிப்பாளர் செல்வி ஹேமா, இணைப்பாளர் பெபி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சியில் கலந்துகொண்டோருக்கான சான்றிதழ்களை வழங்கினர்.

(ஐ-10)

## கிளைக் கடை திறப்பு

தென்மராட்சி, நவ. 12

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கிளைக் கடை கரவெட்டி கோவிற்சந்தைக்கு அருகில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ள சித்தன்கேணியிலும் யாழ். நகரப் பகுதியிலும் விரைவில் புதிய கிளைக் கடைகள் அமைக்கப்படவுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் க. கணேசலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-117)

## நடமாடும் வங்கிச் சேவை

காரைநகர், நவ. 12

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிகிளைக்கிழமை காரைநகரில்நடமாடும் வங்கிச் சேவை ஒன்றை நடத்தியது.

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம. வித்தியாலயத்தில் நடந்த இந்த நடமாடும் வங்கிச் சேவையின் விசேட கருமபீடத்தில் 28 பேர் 'ஜனஜய', 'சிசு உதான' (மாணவர் மலர்ச்சி) ஆகிய சேமிப்புத் திட்டங்களில் இணைந்து கொண்டனர்.

காரைநகர் மக்கள், ஊர்காவற்றுறைமக்கள்வங்கிக்குச் செல்வதில் உள்ள போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்திற்கொண்டே இந்த நடமாடும் சேவை காரைநகரில் நடத்தப்பட்டதாகவும்—

மக்களின் ஆதரவு இருக்கும் பட்சத்தில் தொடர்ந்து மாதாந்தம் இங்கு நடமாடும் சேவையை நடத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் —

ஊர்காவற்றுறை மக்கள் வங்கி முகாமையாளர் கோ. சற்குணபாலன் தெரிவித்தார்.

( ஐ — 73 )

## தேசிய இளைஞர் சேவை மன்றம் நடத்தும் கலாசாரப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 12

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் மாவட்ட மட்டத்திலான இளைஞர் பரிசளிப்பு கலாசாரப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெறுபவர்களுக்கு தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கான ஒழுங்குகள் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும்.

மாவட்ட மட்டத்தில் வெற்றி பெறுவோருக்கு சான்றிதழ்களும் தேசிய மட்டத்தில் வெற்றி பெறுவோருக்கு முதலாம் பரிசு 5 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசு 4 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசு 2 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படுவதுடன் கேடயமும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பேச்சு, அறிவிப்பாளர், நடிப்பு, கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம் (தனி), கிராமிய நடனம் (குழு), வயலின் மிருதங்கம், ஓகன், கிராமியப் பாடல், பாடல் (தனி, குழு) புதிய நிர்மாணிப்பு நாடகம் (பிறேக் டான்ஸ்) ஆகியவற்றில் இந்தப் போட்டிகள் நடத்தப்படும் என்று யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் தி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

## பிரிவுபசார விழா

தென்மராட்சி, நவ. 12

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியைகளாக கடமையாற்றி இளைப்பாறிய திருமதி ம. பத்மநாதன், திருமதி க. சற்குணசிங்கம் ஆகியோருக்கான பிரிவுபசார விழா அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபர் கு. சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இணைந்து நடத்திய இவ் விழாவில் இளைப்பாறிய ஆசிரியைகள் தங்கப்பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டனர். (ஐ-117)

மருத்துவ சேவை வெற்றிடங்களை நிரப்ப

# யாழ்ப்பாண எம்.பிக்களின் உதவியை நாடுகின்றார் ஆஸ்பத்திரிப்பணிப்பாளர்

## தனித்தனியாகக் கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ் போதனா வைத்தியசாலையில் தொடர்ந்து நிலவும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்து மக்களுக்குத் திருப்தியான மருத்துவ சேவைகளை வழங்குவதற்கு உதவுமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி என். கனகரத்தினம் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 9 நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனித் தனியாகக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் நிபுணர்கள், தாதிமார்கள், மருத்துவ மாதுகள் இடைநிலை மருத்துவ உத்தியோகத்தர்கள் போன்ற பல பதவிகளுக்கு வெற்றிடங்கள் இருக்கின்றன.

நீண்ட காலமாக இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதனால் திருப்தியான மருத்துவ சேவையை மக்களுக்கு வழங்க முடியாத நிலையில் இருக்கின்றோம்

இந்த வைத்தியசாலைக்கு மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும் போது யாழ்.மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களை நியமனம் செய்வது சிறப்பாக இருக்கும் எனக் கருதுகிறோம.

வெளிமாவட்டத்திலுள்ளவர்கள் இங்கு வந்து கடமையாற்றப் பின்னடிப்பார்கள் என்பதாலேயே இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்குமாறு வேண்டுகின்றோம். — என்று அக்கடிதத்தில் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் சுகாதார அமைச்சு, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## கூடைப்பந்தாட்ட அரை இறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ 12

ஹற்றன் நஷனல் வங்கி நடத்தும் புத்தாயிரம் ஆண்டுக்குரிய எச். என். பி வெற்றிக் கேடயத்துக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ் இந்து ஆடுகளத்தில் இன்று நடைபெறும் அரை இறுதி ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 30 மணி—பெண்கள்—யுத்கார்மல் அணி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.

★ பிற்பகல் 4-30 மணி—யா/மத்திய கல்லூரி அணி (சொக்ஸ்) எதிர் யா/இந்துக் கல்லூரி அணி

## பனை அபிவிருத்திச் சபையில் மீண்டும் பனம்கூழ் தயாரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

பனை அபிவிருத்திச் சபையினால் மீண்டும் பனம்கூழ் தயாரித்து விற்பனை செய்யப்படவுள்ளதாக சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் கூழ் உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வாடிக்கையாளர்கள் தமது தேவைக்கேற்ப பனம் கூழைப் பெற முடியும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கடந்த மே மாதத்துக்குப் பின் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பதற்றமான சூழலைத் தொடர்ந்து சபையின் பனம் கூழ் உற்பத்தி நிறுத்தப்பட்டது. (ஐ-5)

## காத்தான்குடிப் பகுதியிலும் டெங்குக் காய்ச்சல் பரவுகிறது

தென் இலங்கையில் பரவிவரும் டெங்குக் காய்ச்சல் மட்டக்களப்பு காத்தான்குடியிலும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடந்த நான்கு தினங்களில் டெங்குக் காய்ச்சல் காரணமாகக் காத்தான்குடியில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றொருவர் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## ஆயிரம் நுளம்புவலைகள் 'யுனிசெவ்' வழங்கியது

மாரிகாலம் ஆரம்பித்துள்ளதால் நுளம்பின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன் 'யுனிசெவ்' நிறுவனத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கவென ஆயிரம் நுளம்பு வலைகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தற்கால சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வசிக்கின்ற சிறு பிள்ளைகளை அதிகமாகக் கொண்ட வறிய குடும்பங்களுக்கே இந்த நுளம்பு வலைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நுளமபு வலைகள் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கும் பொருட்டு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் தற்பொழுது ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ-5)

## சட்டவிரோத மீன் சந்தையால் பொது மக்களுக்கு அசௌகரியம்

காரைநகர், நவ. 12

காரைநகர் வேம்படி வீதியில் சட்டவிரோதமாக கூடும் மீன் சந்தையினால் அந்த வீதியால் போக்குவரத்துச் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதியில் தினமும் காலை, மாலை இருவேளைகளிலும் மீன்சந்தை கூடுவதனால் அப்பகுதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள், வாகனங்களில் செல்வோர் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன் அப்பகுதியின் சூழலும் மாசடைந்து வருகின்றது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (இ.73)

---

**கட்டுரையாளர்**

தமிழப் பேரறிஞர் சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் குறித்து ஐந்தாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள கட்டுரையை எழுதியவர் பிரபல மூத்த எழுத்தாளர் 'சிற்பி'.

# மட்டக்களப்பு நகரப்பாதுகாப்பு விசேட அதிரடிப்படையினரிடம்!

## நேற்றில் இருந்து புதிய நடைமுறை

மட்டக்களப்பு,நவ.12

மட்டக்களப்பு நகரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களினது பாதுகாப்புப் பணிகள் நேற்று முதல் இராணுவத்தினரிடம் இருந்து மீளப் பெறப்பட்டு விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதன் முதற் கட்டமாக கல்லடி கோவிந்தன் வீதி மற்றும் பற்பொடிக் கம்பனி ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த இராணுவ முகாம்களில் இருந்து நேற்றுக் காலை முதல் இராணுவத்தினர் அப்புறப்படுத்தப்பட்டனர்.

பின்னர் அந்த முகாம்களுக்கு ஆரையம்பதி விசேட அதிரடிப் படை முகாமைச் சேர்ந்த படையினர் அழைத்துவரப்பட்டனர்.

மட்டக்களப்பு நகரில் இருந்து தெற்கே 12 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள ஆரையம்பதிப் பகுதியிலேயே இதுவரை விசேட அதிரடிப் படையினர் நிலை கொண்டிருந்தனர் எனவும்-

இதனால் சுற்றிவளைப்புக்கள் மற்றும் கைதுகள், காணாமல் போகும சம்பவங்கள் அங்கு அதிகரித்துக் காணப்பட்டதாகவும் மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-7-21)

### முன்னாள் சபாநாயகர் ஆஸ்பத்திரியில்

முன்னாள் சபாநாயகர் கே.பி. ரத்நாயக்கா கடும் சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.அவரது உடல் நிலை மோசமாகக் காணப்படுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

### இம்மாதம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை வழங்கப்படவில்லை.

இதனால் சுமார் ஒரு லட்சத்து 16 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. இதனை அடுத்தே இம்மாத நிவாரணத்தை உடனடியாக வழங்குமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

### காணாமற்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவலில் உள்ள படையினரைப் பார்வையிடுவதற்கு புலிகள் தற்போது அனுமதி தரவில்லை. எனினும் விரைவிலே அந்த அனுமதி கிடைக்கும் என்று நம்புகின்றோம். அதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம் என்றும் அவர் கூறினார். (இ)

### நிபந்தனைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும் நிபந்தனை விதிக்கக் கூடாது- என்றார்.

இன்னொரு கேள்விக்குப் பதிலளித்த பிரதமர்-

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் பயங்கரவாதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். பயங்கரவாதத்தில் ஈடுபடுவோர், அரசியலில் பிரதான நீரோட்டத்துக்கு வரவேண்டும் என்பதே எனது விருப்பம். அதுவே ஜனநாயகம்.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஜே.வி.பியும், ஈ.பி.டி.பியும் அதனைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் சேர்ந்துள்ளனர்.அதே போன்று விடுதலைப் புலிகளும் தமது பயங்கரவாதத்தைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வரவேண்டும். அவ்வாறு செய்தால் மக்கள் அவர்களுக்கு வாக்களித்துத் தங்கள் பிரதிநிதிகள் ஆக்கக் கூடும் - 'என்றார்.

பயங்கரவாதத்தைப் பேச்சு வார்த்தை மூலம் ஒழிக்க முடியாது. போரினால் மட்டுமே அதனை ஒழிக்க முடியும். பயங்கரவாதிகளும் அதனைப் போதிப்பவர்களும் தமது கோட்பாட்டைக் கைவிட்டு பிரதான நீரோட்டத்துக்கு வந்தால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் - என்று பேட்டியின் போது மற்றொரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் பிரதமர் சொன்னார்.

அரசாங்கம் ஏற்கனவே கொண்டு வந்த அரசமைப்புச் சீர்திருத்தம் காலாவதியாகி விட்டது. மீண்டும் அரசமைப்புச் சீர்திருத்தம் கொண்டு வருவதானால் மதகுருமார்களை மட்டுமன்றி ஏனைய அக்கறையுள்ள தரப்பினரையும் கலந்தாலோசித்தே கொண்டு வருவோம்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியும் தங்களுக்கே வழங்கப்படும் என்று பேச்சடிபடுகிறதே எனக் கேட்டதற்கு-

எனக்கு அது குறித்து எதுவும் தெரியாது. மேன்மை தங்கிய ஜனாதிபதியே அது விடயத்தில் முடிவு செய்வார்- என்று பதிலளித்தார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா. (அ)

### தடையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீடித்து வந்தது. இது தவறானது. இந்தத் தடையை நீக்க வேண்டும்.

இப்படி மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் மீதான தடையை மேலும நீடிக்கலாமா என்பது குறித்து விசாரணை நடத்த மத்திய அரசால் அணமையில் டில்லியில் நடுவர்மன்றம் அமைக்கப்பட்டது தெரிந்ததே.

இந்த நடுவர் மன்றம் தமிழ் நாட்டின் நாகர்கோயிலில் சமீபத்தில் தனது விசாரணைகளை நடத்தியது. விசாரணைகள் இரகசியமாகவே நடத்தப்பட்டன. (இ)

### 3 அன்ரனோவ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை ஏற்றி இறக்கப் பயன்படும்.

இதற்காக ஒருவழிக் கட்டணமாக 3ஆயிரத்து 500 ரூபாவும் இருவழிக் கட்டணமாக 6 ஆயிரம் ரூபாவும் அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாக விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-7)

### தமிழ்ப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கக்கூடியது. சிறைக் காவலர்களின் சமீபத்திய நடமாட்டங்கள் எமக்குச் சந்தேகத்தைத் தருகின்றன. தற்போதைய நிலைமை நீடிக்குமானால் சிறைச்சாலைக்குள்ளேயே நாம் மடிந்து போகும் நிலைமை ஏற்படலாம்.

விசாரணைக்கென்று தனி அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு தமிழ்க் கைதிகள் தாக்கப்படுகின்றனர். பலர் காரணமின்றி வேறு சிறைகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

கடந்தமாதம் 26ஆம் திகதி ஏ. சுரேந்திரன். எஸ்.நவரத்தினம், எஸ். மகேந்திரன் ஆகியோரும் 28 ஆம் திகதி என்.பரமேஸ்வரன், ஆர்.பிரபாகரன், என்.நடனசிகாமணி ஆகியோரும் காரணமின்றி வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இது எமது மத்தியில் அச்சத்தை மேலும் அதிகரிக்க வைத்துள்ளது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ ஈழச்செல்வி (கந்தையா ஜெயகலா - முல்லைத்தீவு)

★ யாழிசை (கிருஷ்ணன் அற்புதராணி - யாழ்ப்பாணம்)

★ அருவி (குமாரசாமி சீதாலட்சுமி - கண்டி)

★ அழகன் (மனோகரன் ராஜு- யாழ்ப்பாணம்)

★ ராசன் (தவராஜா ராசன் - யாழ்ப்பாணம்)

★ வசந்தன் (மாணிக்கராஜா ரவி - புத்துவெட்டுவான்)

★ தமிழ்விழி (சுரேந்திரன் றொபேக்கா - யாழ்ப்பாணம்)

★ சீரமுல்லை (சண்முகசுந்தரம் ராதிகா - யாழ்ப்பாணம்) (இ-7)

## சிப்பாய் பலியான விபத்து

# உழவு இயந்திரச் சாரதி பிணையில் விடுவிப்பு!

நெல்லியடி, நவ.12

உழவு இயந்திரத்துடன் இராணுவ மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த சிப்பாய் ஒருவர் பலியானார். உழவு இயந்திரச் சாரதி பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 27 ஆம் திகதி மாலை 6 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம், அல்வாய் வதிரிச் சந்தியில் இடம்பெற்றது.

நெல்லியடிப் பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த மாலுசந்தி இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாயான கபன்ஹேஉபுல்த சில்வா (வயது 28, அளுத்கம) என்பவரே மரணமானவர் ஆவார். விபத்தின் போது தலையில் படுகாயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட சமயம் அவர் அங்கு மரணமானார்.

இந்த விபத்துத் தொடர்பாக ஸ்தலத்துக்குச் சென்ற நெல்லியடிப் பொலீஸார் உழவு இயந்திரச் சாரதியான வைரவப்பிள்ளை தவக்குமார் (வயது 25)என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தனர்.

குறித்த சந்தேகநபர் மறுநாள் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் 2 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 5 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்ல மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார். (இ-109)

### வண்டிலில் இருந்து விழுந்து மரணம்

பொச்சுமட்டை ஏற்றிக் கொண்டு சென்ற மாட்டு வண்டியிலிருந்து தவறி வீழ்ந்தவர் பரிதாபமாக மரணமானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் துன்னாலை ஆயத்துச் சந்தியில் இடம்பெற்றது.

கரவெட்டி கிழக்கு தல்லையபுலத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை மனோகரன் (வயது40) என்பவரே தலையில் படுகாயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் மரணமானார். (இ-109)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



லயன்

வல்லிபுரம் பரமசிவம்

சேவைக்கெனத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துத் துணிவுடன், ஆற்றல் வீரமுடன் செயலாற்றி பண்புடன் உயர்ந்த பண்பாளன் பரமசிவம் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டமையையிட்டு அவரைப் பாராட்டி இன்று கௌரவிப்பதுடன் அவர் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரி.

(C/13799)

## 4வது சிராத்த நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில் 22 . 09 . 1935



விண்ணுலகில் 26 . 10 . 1996

19-11 2000 ஞாயிற்றுக்கிழமை

அமரர் . சின்னையா சுப்பிரமணியம் (சைவம்)

(இளைப்பாறிய சாரதி இ. போ. ச. பருத்தித்துறை)

பண்பின் குலவிளக்கே பாசத்தின் உறைவிடமே
பரிதவிக்க எமை விட்டு பாராது போனதேனோ?
நிழல் இன்றி நாம் இங்கு நின்றாடும் கோலம் காண
அழைக்கின்றோம் அப்பாவே ஆண்டு நான்கு சென்ற பின்பும்.

உங்கள் பிரிவால் வாடும்

கரணவாய் தெற்கு. குடும்பத்தினர்.

★ A/L 2002 C.MATHS
★ " ECON., GEO.
கலை, வர்த்தகப் பிரிவு
★ GR.7 முதல் O/L வரை
SHAMROCK
(C/13805)

NCCA மாதிரிப் பரீட்சை

இம்மாத இறுதியில் நடைபெற இருக்கும் NCCA பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களிற்கு மாதிரிப் பரீட்சை ஒன்று எமது நிறுவனத்தினால் 18ஆம், 19ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் ரூபா.150 செலுத்தி உங்கள் பதிவுகளை 16ஆம் திகதிக்கு முன்னதாக எமது அலுவலகத்திலோ அல்லது யாழ்.மத்திய கல்லூரி கணனிவள நிலையத்திலோ மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,
IIS.
JAFFNA.
(C/13775)

25 வருட காலமாக யாழ்.மக்களின் நல்லபிமானத்தை வென்ற வடபகுதிக்கு மார்பிள் வகைகளின் ஏக விநியோகஸ்தர்களும் இறக்குமதியாளர்களுமான

நியூ விமாகி ஸ்தாபனத்தினர்

தமது 25 வருட கால வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் ஆதரவு நல்கிய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நன்றிகளைக் கூறுவதோடு

இம்முறை விஷேட விலைக் கழிவுடன் வழங்குகிறார்கள்!

குளியலறை சாதனங்கள் - பல வர்ணங்களில் நவீன டிசைன்களில் ஸ்கொடிங்பேன், வோஸ் பேசின், Kitchen சிங், Lab சிங், Stainless Steels சிங், யூரினல்ஸ், எண்ணற்ற டிசைன்களில் சுவரோடுகள் (Wall Tiles) தரை ஓடுகள் (Floor Tiles)

P.V.C. குழாய்கள், Tapகள், சிவப்பு சிமெந்து, வெள்ளைசமெந்து போர்மிகா, தரைவிரிப்புக்கள் (Linonean Sheet's), பெயின்ட் வகைகள், Tea Set, Dinner Set, Glass வகைகள்.

உள்நாட்டு, வெளிநாட்டு மார்பிள் வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்.



வடபகுதியின் ஏக விநியோகஸ்தர்கள்
Lanka Tiles,
Lanka Wall Tiles,
Ceylon Ceramic Co-Operation.

கோயில்கள், பாடசாலைகள் மற்றும் புனருத்தாரணங்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்

மார்பிள் ...னயில் வடபகுதியில் மு... ஸ்தாபனம்!

நியூ விமாகி

.../1,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Office :-

VENKE IMPEX

UG. 18, Peoples Park Shopping Complex,
Colombo - 11.
Tel : 332798, 445769
Fax : 074 - 720567
E-Mail : Vemaki @ VISUAL IK

(80451)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12. 11. 2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.